


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 186 | செவ்வாய்க்கிழமை 31 மே 2022 | வைகாசி 17 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50

# சிறுபோகத்தை கைவிடாதீர்கள்

- பயிரிடப்படாத நிலங்கள் இளம் விவசாயிகளுக்கு
- உரம் தாராளமாகக் கிடைக்கும்

## உணவுப் பாதுகாப்புக்காக ஜனாதிபதி தலைமையிலான கூட்டத்தில் தீர்மானங்கள்

கொழும்பு, மே 31

உணவுப் பாதுகாப்புக்காக விரிவான அரச - தனியார் கூட்டு வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். ☞15



## சப்புகஸ்கந்த மீண்டும் சிக்கலில்!

கொழும்பு, மே 31

2 மாத காலத்துக்கும் மேலாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் தொழில்நுட்பக்கோளாறு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. அதனை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை கனிய எண்ணெய்க் கூட்டுத் தாபனத்தின் ☞15

## 50 ஆயிரம் சிலிண்டர்கள் இன்று விநியோகம்

கொழும்பு, மே 31

50 ஆயிரம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இன்று முதல் சந்தைக்கு விநியோகிக்கப்படும் என்று லிட்ரோ நிறு ☞15

## போராட்டக்காரர்களை வேட்டையாடும் அரசு

### சமூகச் செயற்பாட்டாளர் ரட்டா நேற்றுக் கைது

கொழும்பு, மே 31

பிரபல சமூக ஊடகச் செயற்பாட்டாளரும் அமைதியான போராட்ட இயக்கத்தின் முன்னணிச் செயற்பாட்டாளருமான ☞15

## பொய்யைச் சொல்லி மாட்டிய இலங்கை

கொழும்பு, மே 31

இலங்கைக்கு 700 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதாக ஒருபோதும் குறிப்பிடவில்லை என்று உலக வங்கி தெரிவித்துள்ளது. ☞15

## வடக்கில் வறட்சிக்கு வாய்ப்பு

### எதிர்வுகூறுகிறார் புவியியற்றுறை விரிவுரையாளர்

யாழ்ப்பாணம், மே 31

அதிக அளவிலான வெப்பமும், வேகமான காற்று வீசலும் வடக்கு மாகாணத்தின் நீர்நிலைகளில் அதிகமான ஆவியாக்கத்தையும், தாவரங்களின் அதிகமான ஆவியுயிர்ப்பையும் ஏற்படுத்தும். குறைவான மழை ☞15

## பேக்கரி உற்பத்திகளுக்கும் வரிசை நிலைமை வரலாம்!

கொழும்பு, மே 31

பேக்கரிஉற்பத்திப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞15

## தமிழக உதவிப் பொருள்கள் மன்னார், யாழில் பகிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணம், மே 31

தமிழக அரசால் வழங்கப்பட்ட உதவிப்பொருள்கள் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டத்துக்கு ரயில் ☞13

## "ஹலோ போரிஸ் கடன் பிளீஸ்!"

### தொலைபேசியில் உதவி கோரிய ரணில்

கொழும்பு, மே 31

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கும் இடையில் தொலைபேசியில் முக்கியமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. ☞15

## நீரில் மூழ்கடிக்கப்பட்டே சிறுமி ஆயிஷா கொலை

### சந்தேகநபர் ஒப்புதல்

கொழும்பு, மே 31

பண்டாரகம, அட்டலுகம சிறுமி பாத்திமா ஆயிஷா நீரில் மூழ்கடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை– அட்டலுகம சிறுமி பாத்திமா ஆயிஷா கொலை தொடர்பில் கைதான 29 வயதான நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். தாமே குறித்த சிறுமியை கொலை செய்ததாகத் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் கைதான 29 வயதான 3 பிள்ளைகளின் தந்தை வாக்குமூலம் வழங்கியுள்ளார். (அ–ஒ–இ)

(தொடர்புடைய செய்திகள் உள்ளே)

## பிள்ளைகளின் பசியைப் போக்க ஈரப்பலாக்காய் பறித்த தாய் மீது தாக்குதல்!

கொழும்பு, மே 31

ஈரப்பலாக்காய்கள் இரண்டை தனது உறவினரின் வீட்டிலிருந்த மரத்தில் பறித்து, அதனை விற்று கிடைத்த 100 ரூபாவில், அரைக் கிலோ ☞15

## பாதுகாப்பற்ற கடவையில் ரயில் மோதி இளைஞன் சாவு!

### மக்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், மே 31

அரியாலை, நாவலடியிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையைக் கடக்க முற்பட்ட ☞15

## நல்லூர்க் கந்தன் ஆலய காளாஞ்சி கையளிப்பு



யாழ்ப்பாணம், மே 31

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ள நிலையில், நல்லூர்க் கந்தன் பெருவிழாவுக்கான ஆலயச் ☞15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணிலின் செயற்பாட்டால் நாட்டில் இரத்தம் சிந்தும்

## ராஜபக்சக்களை பாதுகாக்க வேண்டாம் என பேராசிரியர் விஜேசூரிய எச்சரிக்கை

**கொழும்பு, மே 31**

**ரணில் விக்ரமசிங்க சர்வதேசம் ஏற்றுக்கொண்ட ஓர் இராஜதந்திர அரசியல் வாதியாக இருந்தாலும் அவர் ராஜபக்சவினரை பாதுகாக்க மேற்கொள்ளும் செயற்பாடுகளால் நாட்டில் இரத்தம் சிந்தல்களும் பிரச்சினைகளும் ஏற்படலாம் என கொழும்பு பல்லைக்கழகத்தின் பேராசிரியர் சரத் விஜேசூரிய எச்சரித்துள்ளார்.**

இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ரணில் விக்கிரமசிங்க இராஜதந்திர ரீதியில் மிகவும் வரவேற்புள்ள ஓர் அரசியல் தலைவர். அவருக்கு இருக்கும் இந்த வரவேற்பை ராஜபக்சவினர் தந்திரமான முறையில் பயன்படுத்தி வருகிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவும் எந்தவித தயக்கமும் இன்றி அந்தத் தந்திரத்துக்கு அமைய செயற்பட்டு வருகிறார். நாமல் ராஜபக்சவுடன் இறுதியாக நடந்த பேச்சில் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டின் பின்னரே ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்க அரச நிர்வாகம் மற்றும் இராஜதந்திர விடயங்களில் பணியாற்றுவதில் ராஜபக்சவினரை விட உச்சத்தில் இருக்கும் நபர். அவர் பதவியை ஏற்றமை தொடர்பாக எவரும் எதிர்க்கவில்லை. சர்வதேசமும் எதையும் கூறவில்லை. நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனத்தைக் கொண்டுள்ள அவர் பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

உலகில் எந்த நாட்டிலும் இப்படி நடந்ததில்லை.

ரணில் விக்கிரமசிங்க அறிவாளியாக இருந்தாலும் ராஜபக்சவினரை பாதுகாப்பதற்காக அவர் தற்போது மேற்கொள்ளும் நடவடிக்கையால் இறுதியில் ஏற்பட போவது தீ வைப்புகள் அல்ல, இரத்தம் சிந்தல்களே.

ராஜபக்சவினர் 2015ஆம் ஆண்டு தமது பாதுகாப்பைப் உறுதிப்படுத்திக்கொண்டதை போன்று இந்தமுறையும் உறுதிப்படுத்திக் கொள்வார்கள். ரணில் அன்று இவர்களைப் பாதுகாத்ததுபோல் இன்றும் பாதுகாக்கின்றார் -என்றார். (எ-இ)

## பொருளாதாரத்தை பலப்படுத்தக் குழு

கொழும்பு, மே 31

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உயர் அதிகாரம் கொண்ட பொருளாதார பலப்படுத்தல் குழுவொன்றை அமைக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் திறைசேரி செயலாளர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க தலைமையில் அமைக்கப்படவுள்ள இந்தக் குழு, பொருளாதாரத்தைப் பலப்படுத்துவது தொடர்பாக பிரதமருக்கு ஆலோசனை வழங்கவுள்ளது.

இந்தக் குழுவில் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்தன, சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் திறன் அபிவிருத்தி பணிப்பாளர் கலாநிதி ஷர்மினி குரே, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி மற்றும் சாந்த டேனியல் ஆகியோர் அடங்குகின்றனர். இந்தக் குழுவில் தனியார் துறையைச் சேர்ந்த மேலும் மூன்று உறுப்பினர்களும் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்க அனுமதிக்கக்கூடாது!

### முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதை அனுமதிக்க முடியாது என்று முன்னாள் அமைச்சர் விமலவீர திசாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்களுக்கான பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும் மட்டுமே அனைத்துக் கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டது. மற்றும்படி இவர்களுக்கு அரசமைப்புத் திருத்தங்களைக் கொண்டுவர எந்த அதிகாரமும் இல்லை. அதற்குத் தேவையும் இல்லை.

ஒருசிலரின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்பவே அவை எல்லாம் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோன்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து அவரை சிறைக்கைதி போன்ற நிலையில் வைத்துக் கொள்வதற்கு ஒருசிலர் முயற்சி செய்கின்றனர். அவ்வாறான திருத்தங்களுக்கு - முன்னெடுப்புகளுக்கு - முடிவுகளுக்கு நான் ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டேன் -என்றார். (ம)

## 21 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கவேண்டும்

### முன்னாள் அமைச்சர் டலஸ் கோரிக்கை

கொழும்பு, மே 31

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், பொருளாதார மீட்சியை அதிகரிக்கவும் அரசமைப்பில் திருத்தம் தேவைப்படுகின்றது. தனிப்பட்ட மற்றும் அரசியல் நலன்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தங்கள் இலங்கையைப் பின்னடைவுக்குள் தள்ளியுள்ளன. கடந்த கால குறைபாடுகளைப் போக்க நல்லதொரு ஆரம்பம் இது. பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், பொருளாதார மீட்சியை உயர்த்தவும் இது உதவும் -என்றார். (ம)

## இராஜாங்க அமைச்சுக்காக பெரமுனவில் கடும்போட்டி!

கொழும்பு, மே 31

இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கடும் போட்டி நிலவுகின்றது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எத்தனை இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. எனினும், அது இருபது அல்லது இருபத்தைந்துக்கு மட்டுப்படுத்தப்பட வாய்ப்பிருக்கின்றது. சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மேலும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்துகொள்ள உள்ளனர். அவர்கள் நால்வரும் அமைச்சுப் பதவிகளை வகிக்க வாய்ப்பு உள்ளது என்றும் உள்ளகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. (ம)

## 21ஆவது திருத்தத்துக்கு ஆதரவு தெரிவித்தது சு.க.

கொழும்பு, மே 31

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என்றும், உத்தேச வரைவில் உள்ள அனைத்துத் திருத்தங்களுக்கும் உடன்படும் என்றும் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார். அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதேவேளை, சுதந்திரக் கட்சி, மேலும் பல முன்மொழிவுகளை பரிசீலனைக்கு அனுப்பியுள்ளது என்றும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

காலிமுகத்திடலில்

## போராடுகின்ற இளைஞர்களின் கோரிக்கையை செவிமடுங்கள்

### கரு ஜயசூரிய வலியுறுத்து



காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தும் இளைஞர்களின் கோரிக்கையை அரசாங்கம் செவிமடுக்க வேண்டும் என்று நீதியான சமூகமொன்றுக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போராட்டத்தில் ஈடுபடுவோர் எதிர்பார்க்கும் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தாது நாட்டுக்கு சிறந்த எதிர்காலமொன்றை உருவாக்க முடியாது என்பதை ஒட்டுமொத்த நாட்டு மக்களும் புரிந்து வைத்துள்ளனர். அதன் காரணமாகவே ஐம்பது நாள்கள் கடந்தும் மக்கள் ஆதரவுடன் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடியதாக உள்ளது.

அண்மைக்காலத்தில் எந்தவொரு போராட்டத்தினாலும் பெற்றுக் கொள்ள முடியாத பல விடயங்களை நாட்டு மக்களுக்கு இந்தப் போராட்டம் வென்று கொடுத்துள்ளது. அது போன்றே இந்த நாட்டில் நிகழ வேண்டிய அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புகள் தொடர்பில் இன்றும் அவர்கள் பலமாக முன்னின்று போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் போராட்டம் நடத்துவோரின் கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக செவிமடுக்க வேண்டும் -என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியாவுக்கு கச்சதீவை வழங்க அனுமதிக்கோம்!

## மீனவர் வாழ்வாதாரம் பாதிக்கும் என சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, மே 31**

**கச்சதீவை இந்தியா கோருவதை ஏற்கமுடியாது. அவ்வாறு இந்தியாவுக்கு மீண்டும் கச்சதீவை வழங்கினால், வடமாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

கச்சதீவைத் திரும்பப் பெறவேண்டும் என்ற கோரிக்கை இந்தியாவில் எழுந்துள்ளது. கச்சதீவை இந்தியாவுக்குக் கொடுப்பதன் மூலம் வடக்கு மீனவர்களின் நிலைமை மேலும் மோசமடையும். இப்போதே இந்திய மீனவர்கள் மன்னார் முதல் பருத்தித்துறை வரை வந்து மீன்பிடியில் ஈடுபடுவதுடன், எமது வளங்களை இல்லாது செய்வதைக் காணமுடிகின்றது.

50 ஆண்டுகளுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சதீவு இலங்கையிடம் இருக்கின்றது. மீண்டும் இந்தப் பிரச்சினையைத் தொடங்குவது சர்ச்சைகளை ஏற்படுத்தும் - என்றார்.

21ஆவது திருத்தம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

நாட்டில் ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும்.

ஆளுநரின் அதிகாரங்களும் குறைக்கப்படவேண்டும். ஆளுநர் என்பவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக இருக்க முடியாது.

உருவாக்கப்படும் அரசமைப்புத் திருத்தத்தில் இந்த விடயங்களை உள்ளடக்க விரும்பமாட்டார்கள். தமிழ்மக்களுக்கு நிரந்தரத் தீர்வைத் தரக்கூடியவாறு திருத்தத்தை உருவாக்கமாட்டார்கள். அதனால் வரைவை சரியாக ஆராய்ந்தே அதற்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க முடியும் - என்றார். (எ-125)



# திடீரென எரிந்த ஓட்டோ

வவுனியா, மே 31

நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஓட்டோ திடீரென தீப்பிடித்துச் சேதமடைந்துள்ளது.

வவுனியா ரயில் நிலைய வீதியில் நேற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவே இவ்வாறு திடீரெனத் தீப்பிடித்துள்ளது.

வவுனியாப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,110)

# அரச பணியாளர்களுடைய வேலை நாளில் மட்டுப்பாடு

## விரைவில் அறிவிக்கப்படும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, மே 31

அரச ஊழியர்களில் வேலை நாள்கள் விரைவில் மட்டுப்படுத்தப்பட்டு அறிவிக்கப்படும். 5 நாள்களும் பணிக்கு சமுகமளிப்பது அவசியமற்றது.

இதுதொடர்பான அறிவிப்பு வெகு விரைவில் வெளியாகும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

உலக உணவு பற்றாக்குறை தொடர்பில் பல்வேறு தரப்பினர் எதிர்வு கூறியுள்ளார்கள்.

அந்தச் சவாலை வெற்றிக்கொள்ள அரசாங்கம் சிறந்த திட்டங்களை வகுத்துள்ளது. அவற்றை விரைவாகச் செயற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல்வேறு காரணிகளினால் தேசிய விவசாயத்துறை பாதிக்கப்பட்டுள்ளது. அரச அலுவலகங்களைச் சூழவுள்ள காணிகளில் மேலதிக பயிர்ச்செய்கையில் ஈடுபடவேண்டும் என்று சகல அரச ஊழியர்களிடமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள விசாலமான அரச மற்றும் தனியார் காணிகளில் தற்காலிகமாக மேலதிக பயிர்ச் செய்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச சேவையாளர்கள் 5 நாள்களும் சேவைக்கு சமுகமளிப்பது அவசியமற்றது என விரைவில் அறிவிக்கப்படும். அரச சேவையாளர்கள் மேலதிகமாக உள்ள நேரத்தைப் பயனுடையதாக்கும் வகையில் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடவேண்டும்- என்றார். (எ-இ)

புதுப்பிக்கத்தக்க

# தனியார்துறை மின்சாரத்துக்கு 23 பில்லியன் ரூபா நிலுவை!

கொழும்பு, மே 31

தனியார் துறையினிடம் இருந்து கடந்த 8 மாதங்களாகப் பெறப்பட்ட புதுப்பிக்கத்தக்க மின்சாரத்துக்கு அரசு 23 பில்லியன் ரூபா நிலுவையைச் செலுத்தவில்லை என்றும் இதனால், துறைசார் நிறுவனங்கள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது.

உள்ளூர் எரிசக்தி சங்கம் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

தனியார் துறையினிடம் இருந்து கடந்த 8 மாதங்களாகப் பெறப்பட்ட புதுப்பிக்கத்தக்க மின்சாரத்துக்கு அரசு 23 பில்லியன் ரூபா நிலுவையைச் செலுத்தவில்லை.

இலங்கை மின்சார சபை தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கப்படும் மின்சாரத்துக்கான கட்டணத்தை செலுத்தத் தவறியதன் காரணமாக சிறிய மின் உற்பத்தி நிலையங்கள், சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் காற்றாலைகள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதனால் அந்த மின் உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் சுமார் 7 ஆயிரம் ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது - என்று தெரிவித்துள்ளது. (ம)

**எல்லா விசயத்திலையும் அவசரம் காட்டுற அரசாங்கம், இப்ப அரசாங்க உத்தியோகத்தர்மார் விசயத்திலையும் அவசர அவசரமா விட்ட ஒரு சுற்றறிக்கையால நாடே குழம்பிப் போய்க் கிடக்குது. எரிபொருள் விலையேற்றம், தட்டுப்பாடு எண்ட கனக்க காரணங்களால அரசாங்க உத்தியோகத்தர் வேலைக்கு போய் வாறதில பெரும் சிக்கல். சிலபேர் வாங்கிற சம்பளத்தை விடவும் உந்தப் போக்குவரத்துக்கு கூட காசு சிலவழிக்க வேண்டியும் இருக்காம். அதால அரசாங்க உத்தியோகத்தர்மாரை ஒப்பீஸுக்கு அவசியம் எண்டால் மட்டும் கூப்பிடுங்கோ, ஒப்பீஸ் அலுவலைப் பாதிக்காமல் அவையில ஆர் வரோணும், ஆர் நிக்கோணும் எண்டதை நிறுவனத் தலைவர் முடிவு செய்யோணும் எண்டு அரசாங்கம்விட்ட சுற்று நிருபத்தில போட்டுக் கிடந்திச்சு.**

**ஆனால் எங்கட தமிழ் ஆக்களுக்கு ஆர் அவசியமானவை, ஆர் அநாவசியமானவை எண்டு கண்டுபிடிக்கிறதே பெரும்பாடு. முந்தி கொரோனாக் காலத்திலையும் இதேமாதிரி ரூல்ஸ் வரேக்கையே, எல்லாரையும் ஒப்பீஸில கூப்பிட்டு இருத்தி வைச்சு அழகு பார்த்த அதிகாரியள் தான் எங்கட ஆக்கள். அப்பவே ஒழுங்கா ஒரு முடிவை எடுக்க ஏலாமல் தவிச்சவை இப்ப ஏதும் ஒரு முடிவைக் கட்டாயம் எடுக்க வேண்டிய நிலை. ஏனெண்டால், எவ்வளவுக்கு ஆக்களை குறைக்கினமோ அவ்வளவுக்கு அரசாங்கத்துக்குச் செலவு மிச்சம். அதோட அவை வந்து போக பாவிக்கிற பெற்றோலும் மிச்சம். அதால பெற்றோலுக்கு வாற தட்டுப்பாடும் கொஞ்சம் குறையும். இப்பிடிக் கூட்டிக் கழிச்சுப் பார்த்துத்தான் அரசாங்கம் 'அஞ்சு நாளும் அரசாங்க உத்தியோகத்தர்மார் வேலைக்கு வரவேணுமெண்டு கட்டாயமில்லை' எண்டு திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கு.**

**என்னதான் கிளிப்பிள்ளைக்கு சொன்ன மாதிரி அரசாங்கம் தன்ர திட்டத்தை நாலைஞ்சுதரம் சொன்னாலும், அது எங்கட ஆக்களின்ர காதுகளில ஏறவேணுமே. அதால மாவட்டத்துக்கு மாவட்டம், டிப்பார்ட்மெண்டுக்கு டிப்பார்ட்மெண்ட் ஒவ்வொரு ரூல்ஸ் போட்டு, இந்தச் சுற்றறிக்கையை பின்பற்றத் தொடங்கியிருக்கினம். யாழ்ப்பாணத்தில உள்ள -கான்சர் ஆக்களுக்கும் ட்ரீட்மெண்ட் செய்யிற- ஒரு ஹொஸ்பிட்டலில , 'அரசாங்கம் சொன்னாப்போல எல்லாம் அதை மாதிரி நடக்க ஏலுமோ? எல்லாரும் கட்டாயம் வரத்தான் வேணும்' எண்டு அதுக்குப் பொறுப்பதிகாரியா இருக்கிறவர் சொல்லியிருக்கிறார். அந்த ஹொஸ்பிட்டலில சிற்றூழியரா இருக்கிறவைக்கு வந்து போற காசே இப்ப கட்டுப்படியாகுதில்லை எண்டு புலம்பிக் கொண்டிருக்கினம். அதுக்குள்ள ஒவ்வொரு நாளும் கட்டாயம் வரவேணும் எண்டு பெரிய டொக்டர் ஓடர் போட்டதால என்ன செய்யிறதெண்டு தெரியாமல் அவை நிக்கினம். 'டெய்லி வந்து போறதெண்டால் சம்பளத்துக்கு மேலால எங்கட கைக்காசைத்தான் போட்டு வரவேணும். அப்பிடி வாறதை விட எங்கையாவது கூலி வேலைக்குப் போனாலாவது வயித்தை நிரப்பலாம்' எண்டு ஆதங்கப்படுகினம்.**

**கொஞ்சமாசது நாட்டு நடப்பை உந்த அதிகாரிமார் வடிவாப் பார்த்து, ஒரு பொதுவான முடிவுக்கு வந்து, எல்லாருக்கும் ஏத்த மாதிரி டியூட்டியை ஒரு ஒழுங்கில போட்டால் ஏனிப்பிடிக் குழப்பம் வரப்போகுது?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டத்தில்

## ஒரு வருட நுகர்வுக்காக 360 தொன் மஞ்சள் தேவை!

*பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு வருட நுகர்வுக்கு 360 மெற்றிக் தொன் மஞ்சள் தேவைப்படுகின்றது என்று வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சலாதேவி ஸ்ரீரங்கன் தெரிவித்தார்.

திருநெல்வேலி வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனை வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற வயல் விழாவிலும் மஞ்சள் அறுவடை நிகழ்விலும் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் இயற்கைப் பசளையைப் பயன்படுத்தி மஞ்சள் செய்கையை மேற்கொண்டுள்ளோம். 9 மாதங்களுக்கு முன்னர் செய்கை மேற்கொள்ளப்பட்ட மஞ்சளை தற்போது அறுவடை செய்துள்ள நிலையில் மூன்று விதமான படிமுறைகளில் மஞ்சளைப் பதப்படுத்துகின்றோம்.

இதற்கமைய 5 கிலோ பச்சை மஞ்சளில் ஒரு கிலோ மஞ்சள் தூளையும் 5 கிலோ பச்சை மஞ்சளில் 4 கிலோ மஞ்சளையும் பெறமுடியும்.

அரசாங்கம் மஞ்சள் உற்பத்தியில் ஈடுபடுமாறு விவசாயிகளை அறிவுறுத்திய நிலையில் அதற்கான மஞ்சள் விதைகள் மற்றும் செயல்முறை விளக்கங்களை விவசாயப் பணிமனை ஊடாக மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த நிலையில் எதிர்காலத்தில் மஞ்சள் பயிர்ச் செய்கையை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயப் பணிமனையால் பல திட்டங்கள் வகுக்கப்படும் -என்றார். (ம-14-20)

உணவுத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க

# உணவுகளை வீணடிக்காதீர்



### பேராதனைப் பேராசிரியர் வலியுறுத்து

**கொழும்பு, மே 31**

**எதிர்காலத்தில் ஏற்படவுள்ள உணவுத் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு உணவுகளை வீணடிப்பதை முடியுமான அளவு குறைக்க வேண்டும் என்று பேராதனைப் பல்கலைகழகத்தின் விவசாய பீடத்தின் பேராசிரியர் புத்தி மாரம்பே வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கை எதிர்கொள்ளவுள்ள உணவு நெருக்கடி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் மிகப்பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படப்போகின்றது. அது தொடர்பான பேச்சுக்கள், எதிர்வுகூறல்கள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன. எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை தற்போதிருந்தே உருவாகியுள்ளமை தெளிவாக உள்ளது. அதற்காக அச்சமடைந்து பதறமடைவதற்காக இந்தத் தகவல்கள் வெளியிடப்படவில்லை. நாம் எம்மை இந்த இடரை எதிர்கொள்ளத் தயார்ப்படுத்த வேண்டும்.

சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு முன்னர், உணவின் இருப்பை உறுதிசெய்வதற்கு முன்னர், உணவு இறக்குமதிகளை ஊக்கப்படுத்துவதற்கு முன்னர் நாம் உணவை சரியாகக் கையாள்கின்றோமா என்று எம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். உணவுப்பொருள்களை நாம் வீணாக்கிக் கொண்டிருக்கின்றோம். உணவுப் பொருள்களை வீணடிப்பதைக் குறைப்பதற்கு அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுக்கவேண்டும் -என்றார். (ம-14-இ)

> **“உணவு இறக்குமதிகளை ஊக்கப்படுத்துவதற்கு முன்னர் நாம் உணவை சரியாகக் கையாள்கின்றோமா என்று எம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்..!”**

## கோழி இறைச்சி, முட்டை விலை மேலும் எகிறலாம்

யாழ்ப்பாணம், மே 31

எதிர்வரும் காலங்களில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்கலாம் என அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோழித்தீவனம் மற்றும் மூலப் பொருள்களின் விலை அதிகரிப்பதால் இந்த விலை அதிகரிப்பு ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தற்போது கோழி உற்பத்தி 30 சதவீதமாக குறைந்துள்ளது. இதனால் பல பண்ணைகள் மூடப்பட்டு வருகின்றன.

இதேவேளை இறக்குமதியாளர்களுக்கு அடுத்த மாதத்துக்குத் தேவையான மூலப்பொருளை இறக்குமதி செய்ய வங்கிகள் மூலம் 40 மில்லியன் டொலர் கிடைத்தால் அடுத்த ஆறு மாதங்களுக்குத் தொழிலைத் தொடரலாம் எனவும் அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் மேலும் தெரிவித்தது. (ச-இ)

## இரு நிறுவனங்களுக்கு கோப்குழு அழைப்பு

கொழும்பு, மே 31

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவு என்பன அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவுக்கு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அழைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் மருந்துகளுக்கு தற்போது ஏற்பட்டுள்ள பற்றாக்குறை, சுகாதாரத்துறைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் இன்றையதினம் கலந்துரையாடப்படலாம் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த நிறுவங்களின் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் ஆராய்வதற்காகவே கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளன. (ம-க-இ)

## மருந்து நெருக்கடிகள் இரு மாதத்தில் தீரும்!

*சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, மே 31

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு இரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

மருந்து வகைகளின் இறக்குமதிக்காக 400 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைத்துள்ளது. மருந்துகளைக் கோரியதன் பின்னரே மருத்துவ நிறுவனங்கள் அவற்றின் உற்பத்திப் பணிகளை ஆரம்பிக்கும் என்பதால் மருந்துகளை இறக்குமதிசெய்ய மூன்று மாதங்கள் ஆகும்.

இந்த விடயம் தொடர்பில் முன்னணி மருந்து நிறுவனங்களிடம் கலந்துரையாடப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்குள் அந்த நிறுவனங்கள் மருந்துகள் கிடைப்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

உயிர் காக்கும் மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், இலங்கையில் ஏற்பட்டுள்ள மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா என்பன உதவிகளை வழங்கவுள்ளன -என்றார். (எ-இ)

## இலங்கை மருந்துத் தட்டுப்பாடு: உலக சுகாதார நிறுவனம் உதவி



இலங்கையில் தற்போது நிலவும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு உதவுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டெட்ரோஸ் அதானம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் அடிப்படைச் சுகாதார சேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான உதவிகளை வழங்குவதில் உலக சுகாதார ஸ்தாபனம் கவனம் செலுத்தியுள்ளது. இலங்கையின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன உள்ளிட்ட இலங்கைப் பிரதிநிதிகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியா, பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் உதவியால் நாட்டில் நிலவும் மருந்துகளுக்கான தட்டுப்பாடு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைத் தொழிற்றுறையை மீட்டெடுப்பது மிக அவசியம்!

## தேயிலை வர்த்தகர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மே 31

தேயிலைத் தொழில் துறையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு கொள்கை வகுப்பாளர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும் என கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக வர்த்தகர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொள்கை வகுப்பாளர்கள் நிபுணர்களின் கருத்துக்கு மதிப்பளித்து அதற்கு ஏற்றவகையில் செயற்பட வேண்டும். தேயிலை வர்த்தகர் சங்கத்தின் தொழில் பங்குதாரர்களாகச் செயற்படும் தேயிலைச் செடி வளர்ப்போர், உற்பத்தியாளர்கள், பெருந்தோட்ட நிறுவனங்கள், தரகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஆகியோர் இலங்கை தற்போது எதிர்கொள்ளும் நிலைமையை கவலையுடன் நோக்குகின்றனர்.

நாடளாவிய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின்போது இடம்பெற்ற அசாதாரண நடவடிக்கைகள், மக்கள் மற்றும் வர்த்தக சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளன. இதனால் தேயிலை மூலம் கிடைக்கப்பெறும் அந்நியச் செலாவணி கணிசமான அளவு குறைந்துள்ளது.

இலங்கைப் பணியாளர்களில் 10 சதவீதமானவர்கள் தேயிலை தொடர்பான தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்களால் சுமார் 130 கோடி அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி வருடாந்தம் கிடைக்கின்றது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அதைக் கருத்தில்கொண்டு தேயிலை தொழிலுடன் சம்பந்தப்பட்ட நிபுணர்களின் ஆலோசனைக்கு மதிப்பளித்து அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டியது அவசியம் - என்றுள்ளது. (எ-இ)

# சீனி விலை அதிகரிப்பு

கொழும்பு, மே 31

சீனியின் விலை மக்களால் தாங்க முடியாத வகையில் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சந்தையில் 260 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சிவப்புச் சீனி தற்போது 300 ரூபாவுக்கும் 280 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளைச் சீனி தற்போது 330 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிலையில் அதிகரித்துவரும் சீனி விலைக்கு ஏற்ப உணவகங்கள் மற்றும் பேக்கரிகளிலுள்ள சீனி சார்ந்த உணவுப் பண்டங்கள், தேநீர் மற்றும் சிற்றுண்டிகளின் விலைகளும் உயரவுள்ளன என உணவக உரிமையாளர்கள் மற்றும் பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# மரக்கறிகளின் விலை 50வீதம் அதிகரிக்கும்

கொழும்பு, மே 31

அடுத்த சில வாரங்களில் மரக்கறிகளின் விலைகள் சுமார் 50 வீதம் அதிகரிக்கலாம் என்று கொழும்பு மெனிங் சந்தை வர்த்தகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். சந்தைக்கு வரும் மரக்கறியை ஏற்றிய லொறிகளின் எண்ணிக்கை மூன்றில் ஒன்றாகக் குறைந்துள்ளமையே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தாவது:

எரிபொருள் தட்டுப்பாட்டால் சந்தைக்கு மரக்கறிகளை ஏற்றிவரும் லொறிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளன.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால், மலையக பிரதேசங்களில் லீக்ஸ், கரட் ஆகியவற்றின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மரக்கறிகள் உரிய காலப்பகுதிக்குள் கொழும்புக்கு வரவில்லை என்றால், அவை பழுதடைந்து விடக்கூடும். இந்த நிலை ஏற்பட்டால் மரக்கறிகளின் விலையும் அதிகரிக்கப்படலாம்.

இதனைத் தவிர போஞ்சி, தக்காளி, கறி மிளகாய் ஆகியவற்றின் மொத்த விற்பனை விலை ஒரு கிலோ 500 முதல் 700 ரூபாவாக அதிகரித்துள்ளது. அவற்றின் சில்லறை விலை ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளது என்றும் வர்த்தகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-14-இ)

# பொருளாதார நெருக்கடி அடுத்த மாதம் இறுகும்

## எரிமலையின் உச்சியில் உள்ளோம் என பொதுநிர்வாக அமைச்சு எச்சரிக்கை

**கொழும்பு, மே 31**

**நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை அடுத்த மாதம் மேலும் இறுகும் என்று பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அடுத்த மாதத்துக்குள் நாங்கள் நிச்சயமாக பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கவுள்ளோம். எங்களின் விவசாய உற்பத்தியை மீளப்பெற முடியும் என்பதில் எமக்கு எந்த உறுதியும் இல்லை.

இது ஒரு சாதாரண சூழ்நிலையாக இருந்தால், நாங்கள் மற்ற நாடுகளிடம் உதவி கேட்டிருக்கலாம், ஆனால் அதை இப்போது செய்ய முடியாது. பெரும்பாலான நாடுகள் உணவு நெருக்கடியைச் சந்திக்கவுள்ள நிலையில் எமக்கு அவை எவ்வளவு தூரம் உதவிசெய்ய முன்வரப்போகின்றன என்று சிந்திக்க வேண்டும். எதிர்காலத்தில் நாங்கள் வரிசையில் நின்று எரிபொருள் இல்லாமல் வீடு திரும்ப வேண்டியிருக்கும். வரவிருக்கும் உணவுப்பற்றாக்குறையை எதிர்கொள்ள ஒவ்வொருவரும் தங்கள் வீட்டுத்தோட்டங்களில் எந்தப் பயிரை வேண்டுமானாலும் பயிரிட முயற்சிக்க வேண்டும். நாங்கள் எரிமலையின் உச்சியில் இருக்கிறோம் என்பதை நீங்கள் உணரவேண்டும் - என்றார். (ம)





# உணவுத் தட்டுப்பாட்டை நீக்க சிறுதானியப் பயிர்ச்செய்கை!

## விவசாயி தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 31

எதிர்வரும் காலத்தில் உணவுத் தட்டுப்பாட்டை நீக்க சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள வேண்டும் என்று விசேட தேவையுடைய விவசாயி ஒருவர் தெரிவித்துள்ளார். கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் பயறு, உழுந்து, சோளன், கௌப்பி எனப் பல்வேறு வகையான சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறித்த பகுதியில் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயி ஒருவரே நாட்டின் உணவுத்தட்டுப்பாடு தொடர்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் அனைவரும் சிறுதானியப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டால் மட்டுமே எமது பசியை நீக்க முடியும். எதிர்வரும் காலத்தில் அனைவரும் சிறுதானியப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டும். அதிகாரிகள் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு அனைவரையும் ஊக்குவிக்க வேண்டும்- என்றார். (ம-14,113)

# பயறுச் செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்கு நிவாரணம்

கொழும்பு, மே 31

நாட்டில் பயறுச் செய்கையை மேற்கொள்ளும் 14 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு முன்வந்துள்ளது.

இது தொடர்பில் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி விம்லெம்ரா செரன், அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

சந்தையில் தற்போது ஒரு கிலோ பயறு ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது.

சிறுபோகத்தில் வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளாத காணிகளில் பயறுச் செய்கையை மேற்கொள்ள மக்களை ஊக்குவிக்கவேண்டும்.

அதற்கமைய பயறுச்செய்கையை மேற்கொள்ளும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 18 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்க உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு முன்வந்துள்ளது என அமைப்பின் பிரதிநிதி தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்!

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு




வவுனியா, மே 31

'எமக்கான நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்போம்' என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; எமது உறவுகளின் உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி 13 வருடங்களாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எமக்கான நீதியை எந்த அரசாங்கமும் வழங்கவில்லை. அரசாங்கம் மீது நம்பிக்கை இழந்த நாம் சர்வதேசத்திடம் எமக்கான நீதியை வேண்டி தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம். எமது உறவுகளைத் தருமாறே நாம் போராட்டங்களை முன்னெடுக் கின்றோம். நாம் வேறு எதனையும் இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. எனவே எமக்கான நீதி ஒன்று கிடைக்கும் வரையில் நாம் இந்தப் போராட்டங்களை இடைநிறுத்தாமல் தொடர்ந்து முன்னெ டுப்போம். எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இனியாவது சர்வதேசம் முன்வர வேண்டும் - என்றனர். (ம-14.110)

## மக்கள் அனைவரும் இன்று அபிவிருத்தி மாயையை கைவிட்டு உரிமைப் போராட்டத்துக்குத் தயார்

### சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



திருமலை, மே 31

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அபிவிருத்தி என்ற மாயையில் சிக்கியிருந்த மக்கள், இன்று தமது வறுமைக்கு அப்பால் எமது உரிமைப்போராட்டப் பயணத்தில் இணைய உறுதியாக இருக்கின்றனர்.

அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களைத் திசை திருப்பி இருந்தவர்களின் சுயரூபங்களை அவர்கள் இனங்கண்டுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அன்று கோத்தா வேண்டும் என்று சொன்னவர்கள் தான் இன்று கோத்தா வேண்டாம் என்று போராடுகின்றனர். முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட எமது உறவுகளுக்காக சிங்கள மக்கள் கண்ணீர் விட்டு அழுகின்றனர். தமிழிலே தேசிய கீதம் பாடுகின்றனர். இவ்வாறான நல்ல மாற்றங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ளன. இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் முன்னெடுத்த அரசியல் போராட்டத்தை இளைஞர்களாகிய நாம் தொடர்ந்து முன்னெடுப்போம் - என்றார். (க-40)

## சிறுமி ஆயிஷா படுகொலை இரு சந்தேகநபர்கள் கைது



கொழும்பு,மே 31

பண்டாரகம - அட்டுலுகமப் பிரதேசத்தில் 9 வயதுச் சிறுமியான ஆயிஷா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

சந்தேகநபர்களில் ஒருவர் தோட்டத்தொழிலாளர். அவரது வீட்டில் கட்டிலுக்கு அடியில் சேறு படிந்திருந்த நிலையில் சாரம் ஒன்றைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இதையடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டார். அதேவேளை, மற்றுமொரு நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தற்போது, சிறுமியின் கொலை தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மற்றும் ஐந்து பொலிஸ் குழுக்கள் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

அந்தப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமராக்களின் காட்சிகள் மற்றும் போதைப்பொருளில் ஈடுபடுபவர்களை மையமாக வைத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## சிறுமி ஆயிஷாவுக்கு நீதிகோரி வடக்கு - கிழக்கில் போராட்டம்

கொழும்பு, மே 31

பண்டாரகம - அட்டுலுகமப் பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட 9 வயதுச் சிறுமி ஆயிஷாவுக்கு நீதிகோரி, வடக்கு - கிழக்குப் பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று 8 மாவட்டங்களில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சிறுவர்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க குறித்த போராட்டத்தில் பொதுமக்களும் ஒன்றிணையவேண்டும் என்று பெண்கள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சியாக நாட்டில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவும், அவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்படும் பெண்கள், சிறு வர்களுக்கு விரைவில் நீதி கிட்டவேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன. (க-இ)



படுகொலை செய்யப்பட்ட சிறுமி பாத்திமா ஆயிஷாவின் படுகொலைக்கு நீதிவழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி, பண்டாரகம - அட்டுலுகம மற்றும் அயல் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (க-இ)

## ஆயிஷா கொலை வழக்கு: விசாரணைகள் பன்முனை!

கொழும்பு, மே 31

பண்டாரகம - அட்டுலுகமவைச் சேர்ந்த பாத்திமா ஆஷா என்ற சிறுமி படுகொலை செய்யப்பட்ட நிலையில் அவரது மரணம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விசாரணைகளுக்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என அதிகாரசபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க தெரிவித்தார்.

பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்துவதன்மூலம் இவ்வாறான குற்றங்களைத் தடுக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த சிறுமி கடந்த 27ஆம் திகதி தனது வீட்டிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவிலுள்ள கடைக்குச் சென்றபோது காணாமற்போன நிலையில் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## யாழ். போதனாவில் உள்ள சடலங்களைப் பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம், மே 30

யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த 25ஆம் திகதி சேர்க்கப்பட்டு 26ஆம் திகதி உயிரிழந்த சந்நிதி கோயில் தொண்டைமானாறைச் சேர்ந்த எஸ்.செல்லத்துரை (வயது-73) மற்றும் கடந்த 15ஆம் திகதி சேர்க்கப்பட்டு 25ஆம் திகதி உயிரிழந்த எம்.தியாகராஜா (வயது - 77) ஆகியோர்களின் சடலங்களை உரியவர்கள் பொறுப்பேற்குமாறு யாழ்.போதனா மருத்துவமனைப் பிரதிப்பணிப்பாளர் சி.யமுனானந்தா கோரிக்கை விடுத்துள்ளார். (ம-14)



## போதை ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு சங்கானையில் கையெழுத்துச் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 31

எதிர்வரும் ஜூன் மாதம் 26ஆம் திகதி போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சங்கானை பிரதான பஸ் நிலையத்தின் முன்பாக நேற்று கையெழுத்துச் சேகரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

'இலங்கைப் பணத்தை வீணாக வெளிநாடுகளுக்கு அனுப்பக் [illegible] பணத்தை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தவேண்டும்' என்று நிதியமைச்சருக்கு கோரிக்கை விடுக்கும் விழிப்புணர்வுப் பதாகையுடன் கையெழுத்துச் சேகரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட கையெழுத்துக்கள், பிரதமர் அலுவலகத்துக்கும் நிதி அமைச்சருக்கும் அனுப்பப்படவுள்ளதாக சங்கானை இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வரத்தினம் சசிதரன் தெரிவித்தார்.

சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் வலி.தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன், வலி.மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் த.நடனேந்திரன், பிரதேசசபை உறுப்பினர்கள், சங்கானை இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வரத்தினம் சசிதரன் உள்ளிட்ட உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## புத்தரே வந்தாலும்..........!

இத்தனை காலப் பட்டறிவுக்குப் பின்னரும் தெற்கின் இனவாத மனநிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதை பௌத்தர்களின் முக்கியமான மத பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடத்தின் நிலைப்பாடு வெளிப்படுத்தியிருக்கின்றது. நாட்டின் நலனை விடவும்- எதிர்காலத்தை விடவும் இனவாதமே தங்களுக்கு முக்கியமானது என்பதை அஸ்கிரிய பீடம் பட்டவர்த்தனமாகக் காட்டியிருக்கின்றது.

கரணம் தப்பினால் மரணம் என்பதே இப்போது இலங்கையின் நிலைமை. தற்போது மேற்கொள்ளப்படும் தீர்மானங்களே நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்றன. பெரும்பான்மையின மக்களில் சிலரே இந்தத் தருணத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள். அவர்களே நாட்டின் அரசமைப்பு மாற்றப்பட வேண்டும், நிறைவேற்று அதிகாரத்தை நீக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

நாடு படுகுழியில் வீழ்ந்து கிடப்பதற்குக் காரணம் நாட்டின் நிறைவேற்று அதிகாரமும், அரசமைப்புமே. நாட்டின் சிறுபான்மையினருக்கான உரிமைகள் அரசமைப்பில் மறுக்கப்பட்டமையும், கடந்த காலங்களில் அதிகாரத்துக்கு வந்த பௌத்த மேலாதிக்கச் சிந்தனையாளர்களின் கைகளில் நிறைவேற்று அதிகாரம் கிடைத்தமையுமே நாட்டை இப்படிச் சிதைவடைய வைத்தன. சிறுபான்மை மக்களான தமிழ் மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துன்பங்களும், அவற்றின் தொடர்ச்சியாக அவர்கள் ஆயுதம் ஏந்தியமையும் அவற்றாலேயே.

பௌத்த பேரினவாதச் சிந்தனையுடன் கடந்த காலங்களில் செயற்பட்டதன் விளைவு இப்போது தான் முழுமையாக வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றது. சிறுபான்மையின மக்களை அடக்கியே ஆக வேண்டும் என்ற கங்கணத்துடன் அவர்களின் உரிமைகளை மறுத்து சக்திக்கு மீறிய செலவினங்களுடன் பௌத்த மேலாதிக்கச் சிந்தனையாளர்கள் நடத்திய போரின் விளைவை இப்போது முழு நாடுமே அனுபவிக்கின்றது.


கடந்த காலப் பட்டறிவுகளைக் கொண்டு எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டிய இந்தத் தருணத்தில் சிறுபான்மையினருக்கு எங்கே உரிமைகள் கிடைத்துவிடுமோ என்ற அச்சத்துடன் மீண்டும் பௌத்த மேலாதிக்கச் சிந்தனை பல்லிளிக்க ஆரம்பித்திருக்கின்றது. நாட்டின் முன்னேற்றத்துக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்று புத்திஜீவிகள் கருதும் நேரத்தில், 13ஆவது திருத்தச் சட்டம் ஆபத்தானது என்ற புரளியைக் கிளப்பி, நிறைவேற்று அதிகார முறைமை நீக்கத்துக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது பௌத்த உயர் பீடம் என்று கூறிக்கொள்ளும் அஸ்கிரிய பீடம்.

நாட்டின் நலனைப் பற்றியோ எதிர்கால சந்ததி பற்றியோ சிந்திக்காது குறுகிய நோக்கத்துடன் செயற்பட்டதன் விளைவாகவே நாட்டு மக்கள் இப்போது வரிசைகளில் நிற்கின்றனர். இத்தனை அனுபவங்களுக்குப் பின்னரும் பௌத்த பேரினவாதிகளின் மனநிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்பது இந்த நாட்டின் சாபக்கேடே. பௌத்த பேரினவாத மனநிலை மாறும்வரையில் இந்த நாட்டுக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை. அதை உணராதவரை ரணில் அல்ல புத்தரே வந்தாலும் இந்த நாடு மீளப்போவதில்லை.

### நாளொரு நல்வார்த்தை

"கீழ்நோக்கி உங்கள் பாதத்தைப் பார்க்காதீர்கள், மேல்நோக்கி நட்சத்திரங்களைப் பாருங்கள்"

-ஸ்டீபன் ஹக்கிங்




# ரஷ்யாவிடம் எரிபொருள் உக்ரைனிடம் உரம்!

## உதவிகோரி இலங்கை தொடர்ந்தும் பேச்சு

**கொழும்பு, மே 31**

**இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பாக பல தரப்பினருடனும் அரசாங்கம் தொடர்ந்தும் பேச்சு நடத்திவரும் நிலையில், ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளையும் உக்ரைனிடம் இருந்து உரத்தையும் பெற்றுக் கொள்ள சமநேரத்தில் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

உக்ரைன் மிகப்பெரும் உரவிநியோகச் சங்கிலியைக் கொண்டநாடு. ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் என்று அறியப்படும் அந்த நாடு உர உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது. இந்த நிலையிலேயே உரத்தை மானிய அடிப்படையில் அல்லது நீண்டகால கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதேபோன்று ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கும் இலங்கை பேச்சு நடத்தியுள்ளது. கடனுக்காக அல்லாமல் மானிய விலைக்கே எரிபொருளைப் பெறுவதற்குப் பேச்சு நடத்தப்படுகின்றது. இது தொடர்பில் பரிசீலிப்பதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை அறிவித்துள்ள ரஷ்யா அங்கு கடந்த மூன்று மாதங்களாகக் கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. ரஷ்யாவின் தாக்குதலால் உக்ரைன் பல்லாயிரம் பில்லியன் டொலர் இழப்பைச் சந்தித்துள்ளதுடன் இன்றளவும் அந்த நாட்டில் போர் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இந்த நிலையில், தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள உக்ரைனிடமும் தாக்குதல் மேற்கொண்டுவரும் ரஷ்யாவிடமும் இலங்கை சமநேரத்தில் உதவி கோரியமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அனைத்து வீடுகளுக்கும் சூரிய சக்தி மின்சாரம்!

கொழும்பு, மே 31

நாட்டில் வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் சூரிய சக்தியின் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் இலங்கையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மக்களுக்கு அனுமதியை வழங்கி அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

எந்தவொரு வீட்டினதும் தொழிற்சாலைகளினதும் கூரைகள் மீது இலகுவாக பொருத்தக் கூடிய சூரிய சக்தித் தகடுகள் உள்ளன. அவற்றினூடாகப் பகல் வேளையில் மின்சாரத்தை பெறமுடியுமாயின் தற்போது மின்னுற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் நீர் மற்றும் எரிபொருளைப் பயன்படுத்தி இரவு வேளையில் தடையின்றி மின்சாரம் வழங்க முடியும். 24 மணிநேரமும் துண்டிப்பின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும் - என்றார். (எ-இ)

நாளை 01.06.2022 புதன்கிழமை வைகாசி 18

சுபநேரம் : 04.22 - 05.52
ராகுகாலம்: 11.52 - 01.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டகப்புலம் அமலோ[…]
# வருடாந்த வைகாசி மாத திருவி[…]

## அமலோற்பவ அன்னை ஒட்டகப்புலப் பங்கு மக்களைப் பாதுகாத்து வழி நடத்த ஆசிக்கிறோம்



1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா ஆலயபங்கு போரின் பின்னர் வேகமாக புனரமைக்கப்பட்டு 31மே 2017 அன்று திறந்து வைக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு சமாதான காலப்பகுதியில் அன்னைக்கு வழிபாடு செய்ய இராணுவத்தினர் அனுமதி வழங்கினர். 2010ஆம் ஆண்டு ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டு வழிபாடுகள் ஒவ்வொரு மாதமும் இடம்பெற வழியேற்பட்டது. தற்போது மீண்டும் ஊர்மக்களின் பங்களிப்புடன் புனரமைப்பு வேலைகள் நிறைவாகி ஆலயப் பெருவிழா கொண்டாடப்படுகிறது.


நீண்டகாலமாக இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்த அன்னையின் ஆலயம் விடுவிக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டு இப்போது புதிதாக காட்சி அளிப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இதற்கு அனைத்து வகையிலும் பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது நன்றிகள்.

ஒட்டகப்புலம் அமலோற்பவ அன்னை பங்கு மக்கள் அவர்கள் உள்ளூரில் இருந்தாலும் புலம்பெயர்ந்து வெளிநாட்டில் இருந்தாலும் தமது பாதுகாவலி அமலோற்பவ அன்னை மேலும், பங்கு ஆலயத்தின் மேலும் கொண்டுள்ள அன்பும் கரிசனையும் பாராட்டத்தக்கது. ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலய தேவதாயின் திருச்சொரூபம் 16ஆம் நூற்றாண்டிற்குரியது என அறிய வருகிறது. ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா ஆலய தேவதாயின் திருச்சொரூபம் சில்லாலையில் இருந்து கொண்டு வரப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத ஒரு கதை உண்டு.

1990ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் ஊர்மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து செல்ல வேண்டி இருந்தது. உள்நாட்டு யுத்தம் உச்சம் அடைந்த போது இலங்கை விமானப்படை குண்டு வீசி ஆலயத்தை அழிக்க முற்பட்ட போது மாதா ஆலய முகப்பில் தோன்றி குண்டுவீசச் சென்ற விமானிக்கு காட்சியளித்தார் என்றும் ஒரு வயோதிபப் பெண் மட்டுமே நடமாடுவதால் என்னால் அங்கு குண்டு வீச முடியாது என விமானி மீண்டும் பலாலிக்கு திரும்பி விட்டார் என்றும் இதனால் அன்னையின் சொரூபம் பாதுகாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒட்டகப்புலம் அமலோற்பவ அன்னை தாய்க்குரிய அன்போடு ஒட்டகப்புலப் பங்கு மக்களை அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களின் அனைத்துத் தேவைகளிலும் நிறைவு செய்ய பாதுகாத்து வழி நடத்தி இறையாசீர் வழங்க வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கிறோம்.

**மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
**யாழ் ஆயர்**

## குருமுதல்வரின் வாழ்த்துச் செய்தி



நமது யாழ் மறைமாவட்டத்தின் மிகவும் பழமை வாய்ந்ததும் பிரசித்தி பெற்றதுமான ஆலயங்களில் ஒன்றாகிய ஒட்டகப்புலம் அமலோற்பவ அன்னை ஆலயம் இப்பொழுது புதிதாக புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சி தருகிறது. புனரமைக்கப்பட்ட இந்த புதிய ஆலயம் திறந்து வைக்கப்படுகின்ற இந்நன்நாளிலே இந்த ஆலயமக்கள் அனைவருக்கும் இறையாசீர் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றன். இந்த ஆலயம் இன்று புதுப் பொலிவு பெற்று காணப்படுவதற்கு தங்களுடைய தாராளமான நிதி உதவியை வழங்கிய உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் வாழுகின்ற அனைத்து ஆலயத்தை சேர்ந்த மக்களுக்கும் உபகாரிகளுக்கும் என்னுடைய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நாட்டில் நடந்த யுத்தத்தின் காரணமாக இந்த ஆலயத்தை சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தங்களுடைய பாதுகாவலி ஆகிய புனித அமலோற்பவ அன்னைமீது மிகுந்த பக்தி உள்ளவர்களாகவும் அவருடைய அன்புப் பிள்ளைகளாகவும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆலயத்தினுடைய எல்லா செயற்பாடுகளுக்கும் தங்களுடைய பூரண ஒத்துழைப்பையும் வழங்கி கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இந்த வேளையில் இந்த ஆலயம் மக்களுக்கு எங்களுடைய நல்லா சீர்களை தெரிவிக்கின்றோம். உங்களுடைய பாதுகாவலி ஆகிய அமலோற்பவ அன்னை உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் வாழ்வையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**அருட்பணி. ப. யோ. ஜெபரட்ணம்.**

## ஒட்டகப்புலம் அமலோற்பவ அன்னையின் புதுமைகள்

1) ஆலயம் கட்டுவதற்கு சுண்ணாம்புச் சூளை வைப்பதற்குத் தேவையான விறகுகளை எமது ஊரில் ஒருவரின் அனுமதியுடன் நபர் ஒருவர் எடுத்துச் சென்றபோது மாதா அவருக்கு கனவில் தோன்றி இது எனக்கு ஆலயம் அமைக்க கொண்டுவரப்பட்ட விறகு எனக் கூறினார்.
2) ஆவரங்காலைச் சேர்ந்த விதைப்பெண்ணின் தங்கச் சங்கிலியை கழற்றி வீட்டில் வைத்துவிட்டு தோட்டத்தில் உள்ள கிணற்றில் குளித்துவிட்டு வீடு வந்து பார்த்தபோது தங்கச் சங்கிலி காணாமல் போயிருந்தது. அவர் எமது மாதா ஆலயத்துக்கு வந்து தனது ஏழ்மைநிலையை சொல்லி அழுதுவிட்டு மெழுகுவர்த்தியும் கொழுத்தி நேர்த்தி வைத்துவிட்டு சென்றார். மறுநாள் காலையில் தங்கச் சங்கிலியை திருடிச் சென்றவர்கள் அவர்களது முற்றத்தில் எறிந்து விட்டுச் சென்றனர்.
3) வவுனிக்குளத்தில் நெல்வயல் செய்த எங்கள் ஊரைச் சேர்ந்த ஒருவரின் வயலில் நெல் அறுவடை செய்து குவித்து வைத்திருந்தார்கள். அன்றிரவு பெய்த கடும் மழை காரணமாக நெல் கோபுரத்துக்குள் மழை நீர் புகுந்து நெல் மணிகள் பழுதடைந்து விட்டதாக அவர்களது குடும்பம் சோகத்தில் மூழ்கியது. இதனை அவதானித்த அவர்களது மகள் மாதா ஆலயத்துக்குச் சென்று நடந்தவற்றை கூறி அழுதுள்ளார். அப்போது மாதா கலங்காதே மகளே தைரியமாகச் சென்று நெல்லை பார்வையிடுங்கள் என்று கூறினார் அவர்கள் அங்கு சென்று பார்த்த போது நெல் பழுதடையுவில்லை.
4) எமது கிராமத்தில் ராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையில் சண்டை நடைபெற்றபோது எமது ஊர் பகுதியில் நின்ற போராளிகளை குண்டு வீசி அழிக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அப்போது போர் விமானத்தை செலுத்திய விமானி தாழ பறந்து ஆலய பகுதியில் குண்டுகளை வீச முயன்றபோது மாதா விமானிக்கு காட்சி கொடுத்தார். விமானி உடனே கட்டுப்பாட்டு அறையில் உள்ளவருக்கு கூறுகின்றார் வெள்ளை சேலை அணிந்த பெண் மட்டுமே அங்கு உள்ளார் போராளிகளை நான் காணவில்லை இங்கே குண்டு வீச வேண்டிய அவசியம் இல்லை என்கின்றார். இந்த உரையாடலை 1987 ஆம் ஆண்டு வைகாசி 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பலர் எப் எம் அலைவரிசையில் பலர் கேட்டனர்.



ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா ஆ[…]

இலங்கையின் மணிமுடி போல விளங்குவது யாழ்ப்பாணம். அம்மணிமுடியில் பதித்த மாணிக்கங்ககளில் ஒன்று தான் வலிகாமம் வடக்குப் பகுதியில் வயாவிளான் கிழக்கில் வல்லை - தெல்லிப்பளை. அராலி வீதியில் அமைந்துள்ள செம்மண்ணும். ஆழக்கிணற்று நீரும் ஒருங்கே அமைந்த பச்சைப்பசேல் என காட்சி அளிக்கும் ஒரு அழகிய கிராமமே ஒட்டகப்புலம் ஆகும்

1500 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் மன்னர் ஆட்சி நிலவியது. 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோர பகுதிகளை கைப்பற்றி மன்னர் ஆட்சியை தோற்கடித்த துடன் கத்தோலிக்க சமயத்தையும் பரப்பினர் அக்காலப் பகுதியில் ஒட்டகப்புலத்தில் வாழ்ந்த பலரும் கத்தோலிக்க மதத்தை தழுவினார். ஒட்டகப்புலத்தில் ஒரு சிறிய கொட்டகை அமைத்து சின்ன ஒரு மாதாவை வழிபட்டு வந்தனர் அக்காலப் பகுதியில் 15 முதல் 20 குடும்பங்கள் வாழ்ந்து வந்ததாக கூறப்படுகின்றது. தற்போதுள்ள ஆலயத்துக்கு பின்பக்கத்தில் தான் இந்த கொட்டகை அமைக்கப் பட்டிருந்தது. பங்கு மக்களின் அயராத முயற்ச்சியால் ஆலயம் கட்டம் கட்டமாக வளர்ச்ச்சியடைந்தது.

1867 ஆம் ஆண்டு ஆனி மாதம் 18 ஆம் திகதி ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா ஆலயம் கத்தோலிக்க ஆலயம் என இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. 1957 ஆம் ஆண்டு ஆவணி 27 ஆம் திகதி அரச வர்த்தமானியிலும் தெளிவாக கத்தோலிக்க ஆலயம் என கூறப்பட்டுள்ளது.

யாழ் சில்லாலை பகுதியில் பெருமளவில் கத்தோலிக்கர்கள் வாழ்ந்து வந்தனர் சில்லாலையில் உள்ள தொம்பயப்புலம் என்னும் வயலில் விவசாயி ஒருவர் வயலை உழும்போது மானிடவா மானிடவா என்ற குரல் கேட்டது. அவர் அக்கம்பக்கம் எல்லாம் தேடியபோதும் ஒருவரையும் காணவில்லை அவர் வயல் உழுவதைத் தொடர்ந்தார். சிறிது நேரத்தில் கலப்பையின் கொலுவில் ஏதோ ஒன்று மாட்டிக் கொண்டதை உணர்ந்தார் கலப்பையை மண்ணில் இருந்து வெளியே எடுக்க முடியவில்லை அவர் கலப்பையையும் மாடுகளையும் அந்த வயலிலேயே விட்டுவிட்டு ஊருக்குள் சென்று

நடந்ததை ஊர் மக்களுக்கு விவரித்தார்.
ஊர் மக்கள் ஒன்று திரண்டு வயலு[…]
மண்ணில் இருந்து வெளியே எடுத்த[…]
செய்யப்பட்ட பெட்டி மூடியபடி இருந்தது[…]
போது இரண்டு மாதா சுருவங்கள் […]
கைகளையும் கும்பிட்டபடியும் மற்றைய[…]
குழந்தை ஜேசுவை மடியில் வைத்திருப்[…]
இரண்டு மாதாக்களையும் சில்லாலை[…]
வைத்து வழிபட்டு வந்தனர். ஒரு ந[…]
உழவனுக்கு கனவில் கைகும்பிட்ட[…]
தோன்றி தன்னை ஒட்டகப்புலத்திற்கு செ[…]
தெரிவித்தார் உழவன் தனது கனவை[…]
இதனை ஒட்டகப்புல மக்களுக்கும் […]
படுத்தினர். சில்லாலை மக்களும் ஒ[…]
எடுத்துச்செல்ல சம்மதம் தெரிவித்தனர்.
வாய் பறைந்த மாதா என மக்கள் அழை[…]
ஒட்டகப்புல மக்கள் மாட்டு வண்டி[…]
மாதாவை ஊர்வலமாக எடுத்து வந்த[…]
அமைக்கப்பட்ட கொட்டகையில் மா[…]
வந்தனர் (ஆலயம் உருவான வரலா[…]
வெளியிடப்படும்). படிப்படியாக வள[…]
மாகாணத்தில் உள்ள சிறந்த ஆலயங்க[…]
1990 ஆம் ஆண்டு யுத்த காலப்பகுதியி[…]
பல்வேறு இடங்களில் குடியேறினர். ஆ[…]
பெருமளவில் சேதமடையவில்லை 20[…]
2010 ஆம் ஆண்டு ஆலயம் மீண்டும்[…]
வழிபாடுகள் விசேட அனுமதியுடன் ந[…]
முகப்பும் கட்டி முடிக்கப்பட்டது. யாழ். ஆ[…]
நிதிப்பங்களிப்புடன் பங்குத்தந்தை […]
இல்லமும் கட்டப்பட்டது. அதனை தெ[…]
நிரந்தர பங்குத் தந்தையும் யாழ் ஆ[…]




## மரிய[…]

ஒட்டகப்புலத்தில் கோயில் கொண் டெழுந்திருக்கு[…]
யென்று இருகரம் கூப்பி அழைக்கும் எங் கள் தா[…]
எவ்வித பாவியையும் ஏந்தியணைக்கும் […]
அடைக்கலமே. எங்கள் அன்பான அம்மா உமது[…]
மக்கள் அனைவரும் உமது இரக்கத்தை வே[…]
கின்றோம். உமது கருணையின் முகத்தை அ[…]
றோம். நாங்கள் அனைவரும் ஒன்றுசே[…]
சொந்தமான சகலவற்றையும் உமக்குப் ப[…]
ஒப்புத்தருகின்றோம்.
ஒட்டகப்புலச் செல்வியே! வருந்துவோருக்கு ஆறு[…]
வள் ளவே, எங்களை அன்புடன் கண்ணோக்கி […]
தேவையானவற்றை நீர் அறிவீர் தாயே. அவற்[…]
தந்தருளும்.
ஐயொ அம்மா! சிங்காசனத்தில் வீற்றிருக்[…]
துன்பங்களாலும், மன வேதனையாலும் அல்லை[…]
தாயன்புடன் எமக்கு அருகிலிருந்து ஆறுதல் அளி[…]
இறைமகனின் தாயே! எங்கள் இளை […]
பெண்களையும் உமக்கு அர்ப்பணிக்கிறோம்[…]
சோதனைகளில் சிக்கிக்கொள்ளாமலும், கண்[…]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாற்பவ மாதா ஆலய
# விழா சிறப்பிதழ் 31-05-2022





## வாழ்த்துச் செய்தி



தனக்கென ஒரு தனித்துவத்தையும், பாரம்பரியத்தையும், வரலாற்றையும் கொண்டமைந்து அன்றுபோல் மீண்டும் புதுப்பொலிவோடும் எழில் கொஞ்சும் வதனத்தோடும் இன்று புனரமைப்புச் செய்யப்பட்டு காட்சி தரும் ஒட்டகப்புல புனித அமல அன்னையின் ஆலய அபிஷேக, மற்றும் பெருவிழாவைக் கொண்டாடும் அன்னையின் பிள்ளைகள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த விழா வாழ்த்துக்களை பகிர்ந்து நிற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கத்தோலிக்க விசுவாச மணம்பரப்பி, பெருவிருட்சமாய் பூமிப்பந்தின் பல பாகங்களிலும் தன் கிளைகள் தந்து நிற்கும் இவ் ஆலயம், ஒட்டகப்புல சமூகத்தின் உயிர்மூச்சாகவும், அழிக்கப் பட முடியாத ஓர் அடையாளமாகவும் திகழ்கின்றது என்பதை அவ்வூரின் சரித்திரத்தை அறிந்தவர்கள் புரிந்துகொள்வர். நீண்ட காலமாக இடம்பெற்று வந்த அன்னையின் இல்ல புனரமைப்பு பணிகளில் தம்மை அர்ப்பணித்து நேரகாலம் பாராது உழைத்தவர்களையும், அதற்கான நிதிப்பங்களிப்புக்களை வழங்கி உதவிய புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் அன்பு உறவுகளையும், அன்னையின் கரங்களில் ஒப்புக்கொடுத்து அவர்களின் குடும்பங்களையும், பணிவாழ்வையும் அன்னை நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டி நிற்கின்றேன்.

ஊரிழந்து, உடைமையிழந்து, சொந்தங்களிழந்து, நிலமிழந்து உள்நாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலும் அந்நியப்பட்டு அவள் தம் பிள்ளைகள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற போதிலும், தூர்ந்து போயிருந்த அவள் இல்லத்தை மீண்டும் புதுப்பொலிவோடு கட்டியெழுப்பி, அவள் நாமம் போற்றும் இந்நாளிலே, பெருவிழா வாழ்த்துக்கள் பகிர்வதோடு, தொடர்ந்தும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற எஞ்சிய பகுதிகள் விடுவிக்கப்பட்டு, மீண்டும் மக்கள் தம் சொந்த நிலங்களுக்கு திரும்பி மகிழ்வோடு வாழவும், உள்நாட்டிலும், புலம்பெயர் தேசங்களிலும் வாழும் எல்லோரையும், அன்னையின் நிழலில் வாழும் அயற் பங்கு மக்களையும் அன்னை தம் பரிந்துரையால் நிறைத்து இறையாசீர் பெற்றுத்தர வேண்டுகின்றேன்.

**மே.து. அலோய் அருணேஷ்குமார் பங்குத்தந்தை,**
**ஒட்டகப்புலம்,**
**வயாவிளான்.**

## தா ஆலயத்தின் வரலாற்றுச் சுருக்கம்

த விவரித்தார்.
ண்டு வயலுக்குச் சென்று கலப்பையை
ளியே எடுத்தனர் அப்போது மரத்தினால்
டி இருந்தது. பெட்டியை திறந்து பார்க்கும்
சுருவங்கள் இருந்தன ஒரு மாதா இரு
பும் மற்றைய மாதா கதிரையில் இருந்தபடி
ல் வைத்திருப்பதையும் கண்டனர்.
ம் சில்லாலையில் உள்ள ஆலயத்தில்
னர். ஒரு நாள் இரவு வயலை உழுத
கைகும்பிட்டபடி இருந்த மாதா கனவில்
புலத்திற்கு கொண்டுசென்று வைக்கும்படி
னது கனவை ஊர் மக்களுக்கு கூறினார்.
க்களுக்கும் அந்த ஊர் மக்கள் தெரியப்
மக்களும் ஒட்டகப்புலத்திற்கு மாதாவை
தெரிவித்தனர். அன்று முதல் இன்று வரை
மக்கள் அழைத்து வருகின்றனர்
ட்டு வண்டிகளில் சில்லாலை சென்று
எடுத்து வந்தனர். ஓலையால் வேயப்பட்டு
கையில் மாதாவை வைத்து வழிபட்டு
வான வரலாறு விரிவாக புத்தக வடிவில்
யாக வளர்ச்சியடைந்த ஆலயம் வட
ந்த ஆலயங்களில் ஒன்றாகும்
காலப்பகுதியில் ஊர் மக்கள் இடம்பெயர்ந்து
யேறினர். ஆலயம் யுத்த காலப் பகுதியில்
வில்லை 20 வருடங்களுக்குப் பின்னர்
யம் மீண்டும் ஓரளவு புனரமைக்கப்பட்டு
னுமதியுடன் நடத்தப்பட்டு வந்தது. ஆலய
டது. யாழ். ஆயர் மற்றும் ஊர் மக்களின்
ங்குத்தந்தை தந்தை தங்குவதற்கான
அதனை தொடர்ந்து எமது பங்குகென
யும் யாழ் ஆயரினால் நியமிக்கப்பட்டார்.

மீண்டும் ஆலய புனரமைப்பு பணிகள் கடந்த வருடம் மீண்டும் தொடங்கப்பட்டது. சிறப்பாக நடைபெற்ற ஆலய பணிகள் இனிதே நிறைவடைந்ததை தொடர்ந்து கடந்த 28 ஆம் திகதி யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய ஜஸ்டின் பேணார்ட் அடிகளாரால் ஆலயத்தின் அபிஷேக திருநிகழ்வு நடத்தி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வுகளுக்கு பங்குத்தந்தை வணபிதா அலோய் அருணேஷ்குமார் அடிகளார் தலைமை தாங்கினார் ஆலய புனரமைப்பு பணிகளுக்கு செயலாளர் ஜோயல் சமத்தர் தலைமையிலான ஆலய பரிபாலன சபை பகல் இரவு என பங்குத்தந்தையின் ஆலோசனைகளுக்கு அமைவாக உழைத்து ஆலயத்தை மிகவும் சிறப்பாக புனரமைத்துள்ளனர். ஆலய புனரமைய்ப்பு பணிகளுக்கு பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், கனடா, ஐரோப்பா ஆலய கிளைகள் பெருமளவு நிதி வழங்கியதுடன் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தனர்

இன்று வைகாசி 31 ஆம் திகதி நடைபெறும் தேவமாதா எலிச பெத்தம்மாளை சந்தித்து வாழ்த்துப் பெற்ற பெருவிழாவை மிகவும் சிறப்பாக ஒட்டகப்புல மக்கள் கொண்டாடுகின்றனர். காலை திருப் பலியினைத் தொடர்ந்து " விருந்து " என அழைக்கப்படும் அன்ன தான நிகழ்வும் சிறப்பாக நடைபெறவுள்ளது. இம்முறை வழமையை விட பெருமளவு புலம்பெயர் ஒட்டகப்புல மக்கள் வருகை தந்திருந் தமை திருவிழாவை மேலும் மெருகூட்டியது.

திருவிழா சிறக்க பல வழிகளிலும் உதவிய, யாழ் ஆயர் , பங்குத் தந்தை அருட்சகோதர்கள், அருட்சகோதரிகள், ஆலய பரிபாலன சபை, ஆலயத்தின் வெளிநாட்டுக்கிளைகள், பாடகர் குழாம், பீடப் பணியாளர்கள், ஆலயத்தை அலங்கரித்தோர், விருந்து தயாரிக்க உதவியோர், உணவு பரிமாறியோர் ஆலய சிரமதானப்பணிகளில் கலந்துகொண்டோர், நிதி உதவி வழங்கியோர், ஆலயத்துக்கு பொருட்களை அன்பளிப்பாக வழங்கியோர் கட்டட கலைஞர்கள், திருத்த வேலைகளுக்கு உதவிய இராணுவத்தினர் அனைவருக்கும் ஒட்டகப்புலம் மக்கள் சார்பாக எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெறிவித்துக் கொள்கின்றோம்.

## வாழ்த்துச் செய்தி



யாழ். மறைமாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பழமை போற்றும் ஆலயங்களில் ஒன்றான ஒட்டகப்புல அமலோற்பவ அன்னை ஆலயத்தின் மீள்நிர்மாண அபிஷேக விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் ஒட்டகபுல மரியாள் பதியில் பிறந்தவன் என்ற வகையில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆலயம் வெறுமனே கட்டடமல்ல மாறாக ஒரு இறைமக்கள் சமூகத்தின் ஆன்மீக வளர்ச்சியின் வெளிப்பாடாகும். அந்த வகையில் ஒட்டகபுல மக்கள் தங்களது விசுவாசத்தில் வேரூன்றி அதிலே வளர்வதன் அடையாளமாக இருப்பதற்கு முக்கிய காரணமாக அமைவது அமல அன்னையின் பதியாகும்.

யாழ். மறைமாவட்டத்தில் கட்டப்பட்ட ஒருசில ஆலயங்களில் ஒட்டகபுல ஆலயமும் ஒன்றாகும். அன்றிலிருந்து இன்றுவரை யுத்தத்தின் தாக்கங்களால் ஆலயம் பாதிப்புற்றாலும் மீண்டும் மீண்டும் அன்னையின் அருளால் புத்துயிர் பெற்றுள்ளது. 1990 களின் பின்னர் பங்கு மக்களால் ஒரு சில திருத்த வேலைகள் மேற்கொள்ளபட்டிருப்பினும் இன்று அன்னையின் பதி மீள புதுப்பொலிவுடன் காணப்பட எம் ஆலய உள்ளூர் வெளியூர் இறை மக்களின் பேராதரவே காரணமாகும்.

ஆகவே இவர்களுக்கு இறை அன்பு, பராமரிப்பு கிடைக்கப்பெற்று தொடர்ந்தும் எமது ஆலயமானது இறைமக்களை உருவாக்கி பல நூறு வருட வரலாற்றை கடக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

**அருட்தந்தை. அ.அன்ரோ டெனிசியாஸ்**

## வாழ்த்துச் செய்தி



லண்டனில் வசித்து வந்த என்னை மரியன்னை இலங்கைக்கு அழைத்து வந்து என்னையும் ஆலய புனரமைப்பு பணிகளில் ஈடுபட வைத்ததை நான் ஒரு அற்புதமாகவே பார்க்கின்றேன் கோவிட் -19 ஆல் எமது நாடு பாரிய இடர்களை சந்தித்தபோதும் மரியன்னையின் ஆசியுடன், பங்குத்தந்தையின் வழிகாட்டலில் உள்நாட்டு, புலம்பெயர் ஒட்டகப்புல மக்களின் பெருமளவு நிதிப்பங்களிப்புடன் எமது ஆலயத்தை மிகவும் சிறப்பாக புனரமைக்க முடிந்தது. கடந்த 28 ஆம் திகதி யாழ் மறைமாவட்ட ஆயர் வண ஜஸ்டின் பேணார்ட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் அபிஷேக நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. இந்த நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து இன்றைய தினம் திருநாள் திருப்பலியும், மாதாவின் திருச்சுருவ பவனியும் அதனை தொடர்ந்து விருந்து என அழைக்கப்படும் அன்னதான நிகழ்வும் சிறப்பாக நடைபெறவுள்ளது. என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்த ஆயர், பங்குத்தந்தை, ஆலய பரிபாலன சபை, உள்நாட்டு வெளிநாட்டு ஒட்டகப்புல மக்கள், கட்டடக் கலைஞர்கள் அனைவருக்கும் என் சார்பாகவும் எமது நிர்வாகம் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் மரியன்னை உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக அனைவருக்கும் திருநாள் நல்வாழ்த்துக்கள்

நன்றி

**ஜோயல் சமத்தர்**
**செயலாளர்**
**அமலோற்பவ மாதா ஆலய பரிபாலன சபை**

## மரியன்னையை நோக்கிச் செபம்

டெழுந்திருக்கும் ஒட்டகப்புலச் செல்வி
ம் எங் கள் தாயே!
ணைக்கும் அரசியே! பாவிகளின்
அம்மா உமது பாதுகாவலின் கீழுள்ள
க்கத்தை வேண்டி ஒன்று கூடியிருக்
முகத்தை அண்ணாந்து மார்க்கின்
ம் ஒன்றுசேர்ந்து எங்களுக்குச்
உமக்குப் பாதகாணிக்கை யாக

வாருக்கு ஆறுதலை வாரி வழங்கும்
ண்ணோக்கி யருளும். எங்களுக்குத்
ாயே. அவற்றை எமக்கு நிறை வாகத்

ல் வீற்றிருக்கும் அம்மா! உலக
ாலும் அல்லலுறும் எங்களை உமது
ஆறுதல் அளியும்.
ள் இளைஞர்களையும், இளம்
ணிக்கிறோம். வாலிபர்கள் பாவச்
மலும், கன்னிப்பெண்கள் தாங்கள்

அணிகலனான கற்பினைக் களங்கமன்றி காத்திடவும் வரமளித் தருளும் தாயே. விசேஷமாக எங்கள் பிள்ளைகளில் சிலரைத் தேவ அழைத்தலுக்கு தெரிந்தெடுத்தருளும்.

கடைசியாகத் தாயே, பரிந்துரைப்பவள் எனப் போற்றப்படுபவளே, எங்கள் பாப் பானவரையும், ஞான மேய்ப்பர்களையும், விசேஷமாய் எங்கள் பங்குத்தந்தையையும் ஆசீர்வதியும். எங்களை ஆதரித்துக் காப் காப்பாற்றி மண்ணக வாழ்வில் ஆன்மீக தூய்மையையும், விண்ணக வாழ்வில் உம் மோடு இறைவனைப் போற்றிட வரந்தாரும். மூதாயாரே மாதாவே ஆண்டவளே ஆமென்.



**அனுசரணை:**
**மலர் வெளியீட்டுக்குழு**
**ஒட்டகப்புலம் மக்கள்.**

**அமல அன்னையின் திருவிழா**
**சிறக்க தரணிவாழ் ஒட்டகப்புல மக்கள்**
**வாழ்த்தி நிற்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். செலவு அதிகரிக்கும் என்பதால் நிதானம் அவசியம். அந்நியர் மூலம் ஆதாயம் காண்பீர்கள். வார்த்தைகளில் கவனம் வேண்டும்.

**இடபம்:** மனதில் குழப்பம் வந்து செல்லும். செயல்களில் தடுமாறுவீர்கள். கவனம் தேவை. விரும்பியபடி செயற்படுவீர்கள். பிரபலங்களின் ஆதரவால் நன்மை அடைவீர்கள்.

**மிதுனம்** : திடீர்ச் செலவுகளால் தடுமாறுவீர்கள். அரசு முயற்சி இழுபறியாகும். நிதானம் அவசியம். பயணத்தில் கவனம் தேவை. புதிய முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்:** பிள்ளைகளால் நன்மை கிடைக்கும். எதிர்பாராத வரவு உண்டு. அதிர்ஷ்டமான நாள். நேற்றுவரை இழுபறியாக இருந்த வேலை முடிவுக்கு வரும்.

**சிம்மம்:** எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். வேலையில் இருந்த இழுபறி விலகும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

**கன்னி:** இரண்டு நாள்களாக இருந்த நெருக்கடி விலகும். மனம் தெளிவாகும். வெற்றி உண்டு. பிரபலங்களின் ஆதரவால் நினைத்ததைச் சாதிப்பீர்கள். பணவரவு உங்களின் சிரமத்தை நீக்கும்.

**துலாம்:** பயணங்களில் கவனம் தேவை. முயற்சி இழுபறியாகும் என்பதால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். நீங்கள் அமைதியாக இருந்தாலும் பிரச்சினைகள் உங்களைத் தேடி வரும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் உதவியுடன் நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். வழக்கில் வெற்றி கிடைக்கும். விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வருவர். திட்டமிட்டிருந்த செயலில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு:** எதிரிகளை முறியடிப்பீர்கள். உங்கள் எதிர்பார்ப்புகள் இன்று நிறைவேறும். ஆதாயமான நாள். உங்கள் செயற்பாடுகளைக் கண்டு மேலதிகாரிகள் பாராட்டுவர்.

**மகரம்:** எதிர்பார்த்த ஒன்று கடைசி நேரத்தில் கைநழுவிச் செல்லும். மனம் சங்கடம் அடையும். முயற்சியில் தடைகளும் தாமதமும் உண்டாகும். பொறுமையும் நிதானமும் அவசியம்.

**கும்பம்:** அரசு வகையில் எதிர்பார்ப்பு இழுபறியாகும். கணக்கு வழக்குகளில் கவனம் தேவை. எதிர்பார்த்த ஒன்றில் ஏமாற்றம் காண்பீர்கள். வேலைப்பளு அதிகரிப்பதால் சோர்வு அடைவீர்கள்.

**மீனம்:** உங்களுடைய முயற்சி வெற்றி பெறும். பயணத்தால் நன்மையும் ஆதாயமும் அடைவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த தகவல் இன்று வந்து சேரும். ஆதாயம் அதிகரிக்கும்.



## நேபாளத்தில் மாயமான விமானம் கண்டுபிடிப்பு

நேபாளத்தில் காணாமற்போன விமானம் சிதைந்த நிலையில் நேற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று நேபாள நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த விமானத்தில் 22 பேர் பயணித்துள்ள நிலையில் தற்போது வரை 14 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேபாளத்தில் உள்ள மஸ்டாங் மாவட்டத்தில் சுமார் 14 ஆயிரத்து 500 அடி உயர இமயமலைப் பகுதியில் இந்த விமானம் நேற்று முன்தினம் விழுந்து நொருங்கியுள்ளது. அங்கு மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன என நேபாள அரசு தெரிவித்துள்ளது. (ச-இ)

## உக்ரைனுக்கு ஹார்ப்பூன் ஏவுகணை வழங்கியது டென்மார்க்



கீவ், மே 31

உக்ரைனுக்கு போர்க்கப்பல்களை குறிவைத்து தாக்கக்கூடிய ஹார்ப்பூன் ஏவுகணைகளை டென்மார்க் வழங்கியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 4 மாதங்களைக் கடந்தும் போர் நீடித்து வருகிறது.

இந்தநிலையில் ரஷ்யாவின் படையெடுப்புக்கு எதிராகப் போரிட உக்ரைனுக்கு டென்மார்க் ஹார்ப்பூன் ஏவுகணைகளை வழங்கியுள்ளது.

கடலோரப் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த ஹார்ப்பூன் ஏவுகணைகள் பயன்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## ரஷ்யா அதிபர் புடினிடம் உலகின் ஆபத்தான விஷம்

மொஸ்கோ, மே31

ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் உலகின் மிகவும் ஆபத்தான விஷம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆபத்தான விஷத்தின் பெயர் ஸ்ட்ரைக்னைன். இது ரஷ்ய உளவு நிறுவனம் ஒன்றால் பயன்படுத்தப்படுகிறது. இந்த விஷம் குறித்து நச்சுவியல் நிபுணர் நீல் பிராட்பரி தெரிவிக்கையில்,

ஸ்ட்ரைக்னைன் என்பது உலகின் மிகவும் வேதனையான வேதிப்பொருள். உடலுக்குள் போனவுடனே பயங்கர வலியை கொடுக்கும். எலும்புகள் மற்றும் தசைகளை ஒன்றாக இணைக்கும் பிணைப்பை உடைத்து, உடல் முற்றிலும் நடுக்கத்தை ஏற்படுத்தும்.

இந்த விஷம் மிக மெதுவாக செயற்பட்டு பல மணி நேரத்துக்குப் பிறகு மனிதர்களைக் கொல்லும். அவர் சாகும்வரை உடலில் உள்ள தசைகள் தொடர்ந்து வலியை உணர்ந்தபடியே இருக்கும்- என்றார். (ச-இ)

## மோனாலிசா ஓவியத்தை சேதப்படுத்த முயற்சி

பரிஸ், மே 31


பிரான்ஸ் அருங்காட்சியத்தில் உள்ள மோனாலிசா ஓவியத்தை மூதாட்டி போல் உடையணிந்து வந்த மர்மநபர் ஒருவர் சேதமாக்க முயற்சித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லியானார்டோ டாவின்சியால் 16ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட உலகின் புகழ் பெற்ற ஓவியங்களில் ஒன்றான மோனாலிசா ஓவியம் பாரிஸ் நகரிலுள்ள அருங்காட்சியகம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மோனாலிசா ஓவியம் வைக்கப்பட்டிருக்கும் அருங்காட்சியத்துக்கு சக்கரநாற்காலியில் மூதாட்டி வேடமிட்ட நபர் ஒருவர் வந்துள்ளார்.

அந்த நபர் திடீரென நாற்காலியிலிருந்து குதித்து மோனாலிசா ஓவியத்தின் மீது கேக் பூசியுள்ளார். அதனால் அங்கிருந்தவர்கள் திகைப்படைந்துள்ளனர்.

இதன்போது பாதுகாப்புப் பணியாளர்கள் விரைந்து அவரை அங்கிருந்து வெளியேற்றியுள்ளனர். கேக் ஓவியத்தின் கண்ணாடியின் மேல் பூசப்பட்டதால் ஓவியத்துக்கு சேதாரம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. கேக் பூசப்பட்ட ஓவியத்தைப் பார்வையாளர்கள் ஒளிப்படம் எடுக்கும் காட்சி தற்போது சமூகவலைத்தளதில் வைரலாகி வருகின்றது. (ச-இ)



## துப்பாக்கி என்றாலே அலறும் அமெரிக்கா

### *குத்துச்சண்டை மைதானத்தில் பரபரப்பு!*

நியூயோர்க், மே 31

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டி ஒன்றில் துப்பாக்கிச்சூடு நடைபெறுகிறது எனத் தெரிக்கப்பட்டதையடுத்து அங்குள்ள மக்கள் அலறி ஓடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் கடந்த வாரம் பள்ளியில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் உலக அளவில் துப்பாக்கி பயன்பாடு குறித்த பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் குத்துச்சண்டைப் போட்டியில் கேட்ட ஏதோவொரு சத்தத்தை துப்பாக்கிச் சத்தம் எனக் கருதி அலறியடித்து ஓடியதில் சிலர் நெரிசலில் அகப்பட்டு படுகாயமடைந்துள்ளனர். ஆனால் அந்த அரங்கில் எந்தத் துப்பாக்கிசூடும் நடக்கவில்லை என நியூயோர்க் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## குரங்கு அம்மை நோய் மெக்ஸிக்கோ, அயர்லாந்து நாடுகளிலும் பரவலடைவு

உலக நாடுகளில் அதிவேகமாகப் பரவிவரும் குரங்கம்மை நோய் தற்போது மெக்ஸிக்கோ, அயர்லாந்து ஆகிய [illegible] றியப்பட்டுள்ளது. குரங்கம்மை நோய் 20 நாடுகளில் 200 பேருக்கு கண்டறியப்பட்டுள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது. இந்த நிலையில் [illegible] களுக்கு குரங்கம்மை நோய் பரவியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை ஊடாக இராமநாதபுரம் மத்தி ஆலடிக் கிராமத்தில் பெண் தலைமைத் துவத்தைக் கொண்ட 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. (ய-20)




1987ஆம் ஆண்டு போரால் உயிரிழந்த கொடிகாமம் - அல்வாயூர் உறவுகளின் 35ஆவது நினைவு தினம் கிராம மக்களின் பங்குபற்றுதலுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் ஒழுங்கமைப்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது. (ய-159)



'நூறு மலர்கள் மலரட்டும்' எனும் தொனிப்பொருளில் தேசிய கலை இலக்கிய பேரவை கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்புக்களுடன் இணைந்து முன்னெடுக்கும் புத்தக அரங்க விழா கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலையில் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு என மூன்று தினங்கள் நடைபெற்றது. இங்கு ஈழத்து எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களின் படைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் விலைக்கழிவுகளுடனான விற்பனையும் இடம்பெற்றது. (ய-21)




# கொரோனாவால் உயிரிழந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி

திருமலை, மே 31

கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்த, திருகோணமலை மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்களை நினைவேந்தும் நிகழ்வு, திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியில் இருந்து மக்களுக்காகப் பாடுபட்ட கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க.துரைரெட்ணசிங்கம், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் திருகோணமலை நகரசபை உறுப்பினருமான கோ.சத்தியசீலராஜா, தமிழரசுக் கட்சியின் குச்சவெளி- திரியாய் வட்டாரக் கிளையின் முன்னாள் தலைவர் பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் கிண்ணியா பைசல் நகர் வட்டாரக் கிளை முன்னாள் தலைவர் மு.க.மஹ்ரூப், முன்னாள் வில்லூன்றி வட்டாரக்கிளைத் தலைவர் கனக மகேந்திரா ஆகியோர் நிகழ்வில் நினைவுகூரப்பட்டனர். நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா பொதுச்செயலாளர் சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், இரா.சாணக்கியன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (க-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தில் திசைமுகப்படுத்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் 2020/2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

திசைமுகப்படுத்தல் நிகழ்வுகளின் அறிமுக நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட சபா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் நிகழ்நிலையூடாக நடைபெறவுள்ள நிகழ்வில் 2020/2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும், பெற்றோரும் கலந்துகொள்ளமுடியும். நிகழ்வுக்கான இணைப்புகள் புதுமுக மாணவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் மற்றும் அலைபேசிக் குறுந்தகவல்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், இணைப்புகள் கிடைக்காதவர்கள் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தின் 021 222 3610 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (ஒ-,14-26)

# 33,000 லீற் ம.எண்ணெய் நேற்றுப் பகிர்ந்தளிப்பு!

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணத்தில் உள்ள இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்று 33 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களை முன்னுரிமைப் படுத்தியே இந்த மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதன்படி குருநகர் இறங்கு துறைமுகத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு 13 ஆயிரத்து 200 லீற்றர் மண்ணெண்ணெயும் மயிலிட்டி இறங்குதுறைமுகத்தில் உள்ள நிரப்பு நிலையத்துக்கு 19 ஆயிரத்து 800 லீற்றர் மண்ணெண்ணெயுமே இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. (ம-17)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அமரர் பிரபாகரன் பிரமோகன்

(பிரபா அரைக்கும் ஆலை உரிமையாளர்)

கடந்த 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் பிரபாகரன் பிரமோகன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (31.05.2022) செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். 02.06.2022 (வியாழக்கிழமை) பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.


# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பில் சம்பவம்

கொழும்பு, மே 31

இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றொருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கொழும்பு கோட்டை பஸ்ரியன் மாவத்தை பேருந்து நிலையத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்றது.

மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். உயிரிழந்தவர் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர். அவர் நீதிமன்ற வழக்கொன்றுக்காக கொழும்புக்கு வருகை தந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

# விமல் மனைவியின் பிணை பிற்போடல்

கொழும்பு, மே 31

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவியான சஷி வீரவன்ஸ தாக்கல் செய்த பிணைக் கோரிக்கை மனு மீதான பரிசீலனை இன்று வரை பிற்போடப்பட்டுள்ளது.

போலி ஆவணங்களைக்கொண்டு, கடவுச்சீட்டைத் தயாரித்தார் என்று குற்றம்சாட்டப்பட்டிருந்த வழக்கில், சஷி வீரவன்ஸவுக்கு 2 வருடங்கள் சிறைத்தண்டனையும், ஒரு லட்சம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)


## பெறுகை அறிவித்தல் (IFB)

**சாவகச்சேரி நகராட்சி மன்றம்**
**பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம்**
**சாவகச்சேரி மரக்கறிச்சந்தை விற்பனை மேடை தயாரித்து வழங்குதல்**
**(LDSP/NP/JAF/CUC/PT1/2022/01)**

1. பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவீனங்களுக்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசுக்கு ஒரு கடனுதவி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் ஒரு பகுதி சாவகச்சேரி மரக்கறிச்சந்தை விற்பனை மேடை தயாரித்து வழங்குதல் வேலைத்திட்ட கொடுப்பனவிற்கு பிரயோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர்/செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0498, 021 227 0806, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2022.05.31 ஆம் திகதியிலிருந்து 2022.06.15 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. தேவையான தகைமைகள், **கேள்வி ஆவணம் பகுதி** 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) **கேள்வி ஆவணம் பகுதி** 5இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஒப்பந்தம் கையளிக்கப்பட தகுதி பெறுவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் நிதி அமைச்சு அல்லது உலகவங்கி அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு நிறுவனங்களினாலும் கறுப்புப் பட்டியல் படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரர்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) இல் கட்டடங்கள் நிர்மாணிப்புத் துறையில் பதிவினை கொண்டிருக்கவும் வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் 2022.05.31 ஆம் திகதியிலிருந்து 2022.06.15 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் பி.ப 2.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து கோரப்படும் ஆவணங்களுடன் தனித்தனியாக இரு உறைகளில் இட்டு தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 2022.06.15 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைவாக கேள்விப் பிணைமுறியானது கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.
9. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2022.06.07 ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. அ இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியனில் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடி யாகும் காலம் | கேள்விப் பிணை வைப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | LDSP/NP/JAF/CUC/PT1/2022/01 | சாவகச்சேரி மரக்கறிச்சந்தை விற்பனை மேடை தயாரித்து வழங்குதல். | 4.94 | 60 Days | C7/C8 | 63 Days | 49,400.00 | 14.09.2022 |

தலைவர்,
உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
2022.05.31

(CR 38041) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன.
இதன் பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், உதவிப் பொருள்களை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசனிடம் கையளித்தார். உதவிப் பொருள்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களுக்கு நேற்றே வழங்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.
இதேவேளை- மன்னார் மாவட்டத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோ அரிசி மற்றும் பால்மா என்பன நேற்று எடுத்துவரப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து, மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலிடம், உதவிப் பொருள்களை இந்தியத் துணைத் தூதுவர் வழங்கினார்.

(அ-ஓ-5-26-60)



தமிழக...
மூலம் நேற்று எடுத்துவரப்பட்டு உடனடியாகவே மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.
யாழ்ப்பாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள உதவிப் பொருள்களில் ஒரு தொகுதியே ரயில் மூலம் நேற்றுக் காலை எடுத்து வரப் பட்டது. 4 லட்சத்து 37 ஆயிரத்து 750 கிலோ அரிசியும், 7 ஆயிரத்து 500 கிலோ பால்மாவுமே


## வாடகைக்கு உண்டு

யாழ் சின்னக்கடை வீதியில் Hotel Fresh Juice கடை ஒன்று தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு

077 766 0776



## தவறவிடப்பட்டுள்ளது

புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து மயிலிட்டி வரை பயணிக்கும் வீதியில் வயிரமுத்து பாலசேகரத்தினம் என்பவரின் அடையாள அட்டை (521154004 V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

077 558 8835, 077 736 4715



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
கல்விச் செயலாளரின் 03/ 2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய
விசேட சலுகை அடிப்படையிலான தரம் 6-2022 ஆண்டிற்குரிய அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்

**புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ( மாவட்ட வெட்டுப்புள்ளி 148 இற்கும் 158 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்) மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**விசேட சலுகைத் தகைமைகள் (15%)**

1. யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் பிள்ளை
2. பாடசாலையில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் சகோதரர்
3. பாடசாலை அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினுள் பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனங்களில் பணி யாற்றும் கல்விசார் உத்தியோகத்தரின்பிள்ளை

மேற்படி தகைமை களுக்கு தகுதியானவர்கள் மாத்திரம் விண்ணப்பப் படிவத்தினை எமது கல்லூரி அலுவலகத்தில் காலை 8.30 முதல் பி.ப 2.00 மணி வரை பெற்று 2022.06.03 ஆந் திகதிக்கு முன்பாக நேரடியாக அல்லது பதிவுத் தபாலினூடாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி

උතුරු සමුපකාර සංවර්ධන බැංකුව

NCDB

Northern Co-operative Development Bank

## பதவி வெற்றிடம்

| பதவி | கல்வி தகமை/ அனுபவம் |
|---|---|
| *1 x சிரேஸ்ட உத்தியோகத்தர்: அபிவிருத்தி வங்கி* | • பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: பொருளியல், வர்த்தகம், சமூகவியல் அல்லது ஏனைய துறை<br>• குறைந்த பட்சம் 5 வருட தொழில் அனுபவம் - செயற்திட்ட முகாமைத்துவம். தொழில்துறை அபிவிருத்தி, operational delivary , அபிவிருத்தி வேலைதிட்டம் தொடர்பன .திறன்<br>• நிதி மற்றும் கணக்கீடு தொடர்பான கல்வி தகமைக்கு முன்னுரிமை<br>• செயற்திட்டங்களை திறன்பட முன்னெடுத்தல்,<br>• கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை<br>• MS Office மென்பொருளை கையாளும் திறன்<br>• அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன்<br>• வடமாகணத்தில் எப்பிரதேசத்திலும் பணிபுரிவதற்கான இயலுமை |
| *2 x அபிவிருத்தி உத்தியோகத்தர்: அபிவிருத்தி வங்கி (கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம்)* | • பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: நிதி, கணக்கீடு, அல்லது வர்த்தகம்<br>• நிதி மற்றும் கணக்கீடு தொடர்பான கல்வி தகமைக்கு முன்னுரிமை<br>• கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை<br>• நிதி முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் சார்ந்த தொழில் அனுபவம் (குறைந்த பட்சம் 1 வருடம் தொழில் அனுபவம்)<br>• சிறிய நடுத்தர நிறுவனங்களில் வேலை செய்த அனுபவம் (குறைந்த பட்சம் 1 வருட தொழில் அனுபவம்)<br>• MS Office மென்பொருளை கையாளும் திறன்<br>• அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன்<br>• வடமாகணத்தில் எப்பிரதேசத்திலும் பணிபுரிவதற்கான இயலுமை |

விண்ணப்பதாரிகள் lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொண்டு தங்கள் பதவி நிலைக்கான விதிமுறைகள் மற்றும் விண்ணப்ப படிவத்தை **ஆனி மாதம் 06ம் திகதிக்கு** முன்னர் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை **2022 ஆனி மாதம் 15ம் திகதிக்கு** முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்கள் மட்டுமே நேர்காணலுக்கு உள்வாங்கப்படுவார்கள்.

**வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, கைதடி.** **தலைவர்.**



ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராசா
### கோவிந்தராசா பத்தர்
(கோவிந்து)

திதி:- பிரதமை

தோற்றம் 25.02.1952 — மறைவு 11.06.2021

அன்பான அப்பாவே! பாசத்தின் திருவுருவே
ஆண்டுகள் ஒன்று ஓடி மறைந்திட்டாலும்
உம்பிரிவின் துயரமது ஆறாது ஒருபோதும்
பாசமாய் வளர்த்தெம்மை தாங்கி நின்றீர்
இனி எப்போ காண்போமென ஏங்குகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இல. 64 காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
021 222 3432, 021 222 5164



## மரண அறிவித்தல்

## சத்தியமூர்த்தி அன்னமுத்து

**தோற்றம்: 07.12.1946** **மறைவு: 30.05.2022**



பொலிகண்டி மேற்கு, நம்பித்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியமூர்த்தி அன்னமுத்து நேற்று (30.05.2022) திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சினத்துரை சின்னமணி தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற (KTS) சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி யின் (ராசா) அன்பு மனைவியும், திருமதி கவிதா (லண்டன்) அவர்களின் பாசமிகு தாயாரும், நவரட்ணம், பிரபாகரன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும், றம்சிகா, கவிஷேக் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2022) புதன்கிழமை காலை 09.00 மணியளவில் பொலிகண்டி மேற்கு, நம்பித்தாவத்தையிலுள்ள அவரது மைத்துனியின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொலிகண்டி மேற்கு, ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனக் கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நம்பித்தாவத்தை
பொலிகண்டி.
077 087 3177

தகவல்:
கவிதா (மகள்)
தனலக்ஷ்மி நந்தகுமார் (மைத்துனி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது நண்பன்

## திரு. மாசிலாமணி சுகந்தன்



அவர்கள் 26.05.2022 அன்று
யாழ்.மேல் நீதிமன்ற
நீதவான் முன்னிலையில்
சமாதானநீதவானாக
சத்தியப்பிரமாணம்
செய்து கொண்டதையிட்டு
மகிழ்ச்சியடைவதுடன் மேலும்
எமது நண்பனை பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்: நண்பர்கள்

(cs.44947) (2.6)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

## பசுபதிப்பிள்ளை இராசரத்தினம்



கடந்த 01.05.2022 ஞாயிற்றுகிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் **பசுபதிப்பிள்ளை இராசரத்தினம்** அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.05.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் கொய்யாத்தோட்டம் இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து தொலைபேசி மூலமும் நேரிலும் ஆறுதல் கூறியவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்கள் மற்றும் பல வழிகளிலும் துயரில் பங்கெடுத்தவர்கள், உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல 31 புதுவீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

---

University of Jaffna

# University of Jaffna

## Kandiah Karthigaesan Tamil Library Trust Fund

## Preservation and Digitization of Sri Lankan Tamilology collection

University of Jaffna, Sri Lanka will entertain applications for the *"Project Assistant"* full-time on contract basis under the project titled *"Preservation and Digitization of Sri Lankan Tamilology collection"* from suitably qualified persons.

**Required Qualifications and Experience**

1. should have passed the G.C.E (O/L) examination in six subjects (not more than two sittings) with two credit passes including Tamil language and mathematics and ordinary pass in English language.

AND

2. should have passed the G.C. E. A/L examination with three passes.

AND

3. should have obtained a certificate of proficiency not below the NVQ level 5 issued by a Technical / Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Information Communication and Multimedia Technology/ Information and Communication Technology/ Information Technology/ Database Management System/ Graphic design

* Preference will be given to those who have work experience in ICT/ Database Management System.

**Salary:** LKR 30,000.00 per month. In addition, EPF 12% and ETF 3% will be paid.

**Age:** Not more than 35 years on the closing date of application.

**HOW TO APPLY:**

Candidates should submit their applications in the prescribed format available on the University website (**www.jfn.ac.lk**) and addressed to the Librarian (Project Coordinator), Library, University of Jaffna, Ramanathan Road, Thirunelvely, Jaffna by registered post with certified photocopies of the relevant certificates, on or before 15th June 2022. For further details incl uding detail Terms of Reference, please visit the website www.jfn.ac.lk

Registrar
30.05.2022

---

# 29ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23
.
10
.
1926



மறைவு
22
.
05
.
1993

## அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

(விவசாய நண்பன்)

கைதடி கிழக்கு கைதடி

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
அன்பின் வடிவாய் இருந்த உத்தமரே!!

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்!!

மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எம்முடன் என்றும் இருப்பீர்கள்!!!

கைதடி கிழக்கு,
கைதடி.

மனைவி: திருமதி சடப்பி[illegible] சங்கரப்பிள்ளை,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

(cs.44430) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
21
.
01
.
1927



விண்ணில்
11
.
06
.
2021

வட்டுக்கோட்டை குலத்துங்கோ வழித்தோன்றல் கலட்டி அம்மன் கோவில் வீதி,
சீனியர் லேன், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும்
கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் S.S. நவரட்ணம் மதியாபரணம்

மதியாபரணம் கற்பரசி தானடைந்தார்
ஆண்டு பிலவரும் வைகாசி வெள்ளி
சிவன் சுடர் பாதம் தாங்குதுயர்
அபரபக்க பிரதமை திதியில்
விண்ணுலகம் சேர்ந்தடைந்தார்.

பரமசிவனின் நல்லாசி பெற்று
படைத்தவனின் கருணையால் கருவில் உயிராகி
குழந்தைச் செல்வமாய் பிறந்த
இத்தரணியிலே பூர்வ ஜென்ம பலனாக மதியாபரணமாக
அவதரித்த குலக் கொடியே!
எம் தாய் இறைவனிடம் காட்டிய அன்புக்கு அளவில்லை
தினம் இருமுறை விளக்கேற்றி பூசைசெய்து
இறை நம்பிக்கையில் நல் வழிகாட்டி, கூட்டுப்பிரார்த்தனை
செய்ய வைத்த எம் அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
மறையாது உம் நினைவுகள் எம்மனதில்
பரமசிவா ! பரமசிவா !! பரமசிவா !!!

23/24, கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
077 324 9427, 021 224 0137

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(cs.44886) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபோகத்தை...

உரத் தேவையைப் பூர்த்தி செய்ய பல நாடுகளுடன் நடத்திய பேச்சு வெற்றியடைந்துள்ளது. எனவே உரத் தட்டுப்பாடு அல்லது வேறு எக்காரணம் கொண்டும் சிறுபோகத்தில் பயிர்ச் செய்கையை கைவிட வேண்டாம் என அனைத்து விவசாயிகளிடமும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சிறுபோக பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உணவுப் பற்றாக்குறையைக் குறைத்தல் தொடர்பான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

**தேசிய உரக் கொள்கை**

உர இறக்குமதி, விநியோகம், முறையான முகாமைத்துவம், விழிப்புணர்வு, விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு என்பவற்றுக்காக தேசிய உரக் கொள்கையொன்று உடனடியாக வகுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். விவசாயிகளின் விருப்பத்துக்கு ஏற்ப இரசாயன அல்லது சேதனப் பசளையைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விவசாய அமைச்சின் ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

**உப பயிர்கள்**

சிறுபோகத்தில் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படாத வயல் நிலங்களைக் கண்டறிந்து, பயறு, கௌபி, சோயா உள்ளிட்ட அத்தியாவசியப் பயிர்களைப் பயிரிட ஊக்குவிப்பதன்மூலம், விவசாயிகள் அதிக வருமானம் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கமுடியும். சோளம், சோயா மற்றும் ஏனைய பயிர்களை பயிரிடுவதற்காக தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான கந்தகாடு விவசாய நிலத்தை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

பயிரிடப்படாத நிலங்களில் பெரும் பகுதி அரசுக்குச் சொந்தமானது. அந்த நிலங்களைக் கண்டறிந்து இளம் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.

**வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு**

வீட்டுத்தோட்டம் மற்றும் அரச அலுவலக நிலங்களில் பயிரிடுவதை ஊக்குவிக்க வேண்டும். அதற்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல் தலைவர்கள் முதல் அனைத்து அரச ஊழியர்களும் பங்களிப்புச் செய்து முன்னுதாரணமாகத் திகழ வேண்டுமென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பயிரிடப்பட வேண்டிய பயிர்களை இனங்கண்டு, அனைத்து மாகாண ஒருங்கிணைந்த பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு வாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் விவசாயம், கால்நடை வளங்கள் மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில்களுக்கு மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைக் குறைபாடின்றி வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

உரத் தேவையை இலக்காகக்கொண்டு எதிர்வரும் பெரும் போகத்துக்கு பொஸ்பரஸ் அடங்கிய உரங்களை உற்பத்தி செய்வதற்கு எப்பாவல பொஸ்பேட் வைப்புகளை உகந்த முறையில் பயன்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

**கால்நடைத் தீவனம் வழங்கல்**

பால், முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையைக் கட்டுப்படுத்த கால்நடை தீவனம் வழங்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைத்தல், உணவைச்சிக்கனப்படுத்தல், உணவைச் சேமித்து வைத்தல், உணவைப் பதப்படுத்தல் மற்றும் விவசாய உற்பத்திகளின் பெறுமதியை உயர்த்தல், மாற்று உணவு வகைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் பிரபல்யப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று, பயிர்களில் ஏற்படும் நோய்கள் மற்றும் பயிர்களைப் பாதிக்கும் களைகள், பூச்சி சேதங்களைத் தடுப்பதற்கு பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தல் மற்றும் விவசாய உற்பத்தி சார்ந்த சுயதொழில் ஊக்குவிப்பு உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலர் எம்.பி. ஆர். புஷ்பகுமார தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## 50 ஆயிரம்...

வனம் அறிவித்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் இலங்கையை வந்தடையவிருந்த 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு தாங்கிய கப்பல், நாட்டுக்கு வருவதற்கு மேலும் தாமதமானதால் சமையல் எரிவாயு விநியோகம் முன்னெடுக்கப்படாமல் இருந்தது. அந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது. இதனையடுத்தே 50ஆயிரம் சிலிண்டர்கள் இன்று முதல் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளன. (அ-ஒ-இ)

## போராட்டக்காரர்களை...

'ரட்டா' என அழைக்கப்படும் ரனிந்து சேனாரத்ன கொம்பனித்தெருப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாருக்கும், நீதித்துறைக்கும் இடையூறு ஏற்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகக் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்துக்கு அவர் நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

சுமார் 2 மணிநேரம் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்த பொலிஸார் அதன் பின்னர் கைது செய்தனர்.

இவரது கைதுக்கு பெரும் கண்டனங்கள் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில், அவர் நேற்றிரவு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (அ-ஒ-22)

## பொய்யைச்...

அடுத்த சில மாதங்களுக்குள் உலக வங்கி சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கும் என உலக வங்கியின் இலங்கை முகாமையாளர் சியோ கண்டா தெரிவித்தரென வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் தகவலையே உலக வங்கி மறுத்துள்ளது. (அ-ஒ-இ)

## பாதுகாப்பற்ற...

இளைஞனை ரயில் மோதியது. அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்த விபத்து நேற்று பி.ப. 2 மணிக்கு இடம்பெற்றது.

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மரியசீலன் அரவிந்தன் (வயது - 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அதிவேக ரயில் மோதி இந்த விபத்து ஏற்பட்டது.

அரியாலையிலுள்ள உறவினர்களைப் பார்க்கச் சென்ற சமயமே இளைஞர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

விபத்தையடுத்து அந்தப் பகுதி மக்கள் ரயிலை நகரவிடாது போராட்டத்தை மேற்கொண்டனர். பாதுகாப்பற்ற கடவையில் பாதுகாப்பு பணியில் ஒருவர் சிலவேளைகளில் கடமையில் இருப்பதாகவும் பல சந்தர்ப்பங்களில் அவர் இருப்பதில்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றம்சுமத்தினர். பொலிஸார் அங்கு வந்து, இனிவரும் காலங்களில் கடவையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பணியில் ஈடுபடுத்தப்படுவார் என்று உறுதியளித்தன் பின்னரே ரயிலை புறப்பட அனுமதித்தனர்.

இறப்பு விசாரணைகளை போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## "ஹலோ...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, இலங்கையின் தற்போயை நிலைமை குறித்து போரிஸ் ஜோன்சனுக்குத் தான் விளக்கமளித்தார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், நாட்டின் ஏற்றுமதி சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கைக்கு உதவுவதாக பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் உறுதியளித்தார் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-22)

## சப்புகஸ்கந்த...

தொழில்நுட்பக்குழு மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். மசகு எண்ணெய் கொள்வனவின்போது ஏற்பட்ட பிரச்சினை காரணமாக சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு பணிகளை கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்த இலங்கை கனிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தது. இதன்காரணமாக நாளாந்தம் இடம்பெற்ற டீசல், மண்ணெண்ணெய் மற்றும் விமான எரிபொருள் ஆகியவற்றின் உற்பத்திகள் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## வடக்கில்...

கிடைப்பனவு, அதிகமான ஆவியாக்கம், உயர்வான நீர்ப்பயன்பாடு என்பன வடக்கில் சில பகுதிகளில் ஜூலை மாதத்தின் நடுப்பகுதியில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்க கூடும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா எச்சரித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

2022ஆம் ஆண்டுக்கான தென் மேற்கு பருவக்காற்றினுடைய உடைவு-வெடிப்பு இலங்கையில் நேற்றுமுந்தினம் ஆரம்பித்துள்ளது. இவ்வாண்டுக்கான தென்மேற்கு பருவக்காற்றினுடைய முதலாவது ஈரலிப்பான காற்றுத் தொகுதி வென்னப்புவ தொடக்கம் அகங்காம வரையான இலங்கையின் மேற்கு மற்றும் தென்மேற்கு நிலப்பகுதியில் வீசத் தொடங்கியுள்ளது.

ஆசியா கண்டத்தில் உள்ள நாடுகளில் இலங்கைக்கே இவ்வாண்டின் முதலாவது தென்மேற்கு பருவக்காற்று வீசியுள்ளது.

ஆனால், இவ்வாண்டுக்கான பருவ மழை சராசரியைவிட குறைவாகவே இருக்கும். ஆயினும் செறிவான மழை கிடைப்பனவின் காரணமாக வெள்ளப் பெருக்கு இடம்பெற வாய்ப்புள்ளது. தென் மேற்கு பருவமழையின் குறைவான கிடைப்பனவு இலங்கையின் பெரும்பாலான பகுதிகளின் நீர்ப்பாசனம், விவசாயம், நீர்மின் உற்பத்தி போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும். இக்காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் வறண்ட காற்றுடன் கூடிய வெப்பமான வானிலையே நிலவும்.

அவ்வப்போது மேற்காவுகைச் செயற்பாட்டின் காரணமாக குறிப்பிடத்தக்க அளவான மழை கிடைக்க வாய்ப்புள்ளது. எனினும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை வடக்கு மாகாணத்துக்கு குறைந்த அளவிலேயே மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்றுள்ளது. (அ-ஒ-5)

## பேக்கரி...

இதனால் பேக்கரி உற்பத்திப் பொருள்களைப் பெறுவதற்காக வரிசைகள் ஏற்படக்கூடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

சிறு அளவில் செயற்படும் பேக்கரிகள் மூடப்படும் நிலையை எதிர்நோக்கி வருவதன் காரணமாக இந்த நிலை உருவாகலாம் எனவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## நல்லூர்க் கந்தன்...

சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகர சபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி பெருவிழா நாட்காட்டி அடங்கிய காளாஞ்சி ஆலயத்தினரால் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி. மணிவண்ணன் அதனைப் பெற்றுக் கொண்டார். யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனும் உடனிருந்தார். (அ-ஒ-5)

## ஈரப்பலாக்காய்...

அரிசியைக் கொள்வனவு செய்து வீட்டில் பட்டினியுடன் இருந்த குழந்தைகளுக்கு பசியைப் போக்கிய பெண் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஈரப்பலாக்காய் மரத்துக்குச் சொந்தக்காரரே இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளார். சம்பவம் தொடர்பில் வெலிகேபொல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள அந்தப்பெண், தன் மீது தாக்குதல்களை மேற்கொண்டவர், தனது உறவினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நோய்வாய்ப்பட்டிருக்கும் தன்னுடைய சிறிய பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லை. இந்நிலையில், தன்னுடைய உறவுக்காரருக்குச் சொந்தமான ஈரப்பலாக்காய் மரத்திலிருந்து இரண்டு காய்களை பறித்து, அதனை விற்று, அரைக் கிலோ அரிசியை வாங்கி, சமைத்துக்கொடுத்தேன் என்றும் அந்தப்பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 9 கலவரம் தொடர்பில் மேலும் 16 பேர் கைது!

கொழும்பு, மே 31

மே 9 கலவரம் தொடர்பில் மேலும் 16 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

குறித்த கலவரத்தில் இதுவரை 2 ஆயிரத்து 56 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 900க்கும் மேற்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை- இதுவரை 12 நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்துள்ளார். (ம-14-இ)

# காலியில் பொலிஸார் மக்களிடையே மோதல்

கொழும்பு, மே 31

காலி மாவட்டத்தின் பலப்பிட்டிய பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இடையே மோதல் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

போதையில் இருந்த சிலரை பொலிஸார் விசாரித்தபோதே இந்தச் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பொலிஸார் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த அசம்பாவிதம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ச-இ)

# தென்னக்கோனுக்கு பதிலாக பலிஹக்கார நியமனம்

கொழும்பு, மே 31

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக, பிரதிப்பொலிஸ்மா அதிபர் டி. ஜே.பலிஹக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுதல் 14 நாள்களுக்கு நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவால் வழங்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீண்டும் கடமைக்குத் திரும்பும்வரை பலிஹக்கார கடமையாற்றுவார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (க-இ)

# பிலிப்பைன்ஸ் மக்களை திரும்பிவரக் கோரிக்கை

கொழும்பு, மே 31

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையில் தங்கியுள்ள பிலிப்பைன்ஸ் நாட்டவர்களை உடனடியாக திருப்பி வருமாறு பிலிப்பைன்ஸ் அரசு அறிவுறுத்தியுள்ளது.

எமது நாட்டவர்களைத் திருப்பி அனுப்புங்கள் என்று வெளியுறவுத்துறை செயலர் தியோடோரோ லோக்சின் கொழும்பிலுள்ள பிலிப்பைன்ஸ் துணைத் தூதரகத்தை நேற்றுமுன்தினம் வலியுறுத்தினார். (ம-14-இ)

**பெண் வேலையாட்கள் தேவை**

உணவு மற்றும் மென்பான உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு உற்பத்தி பிரிவில் வேலை செய்வதற்கு பெண் ஊழியர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

021 221 3788,075 466 5555

**திருமாங்கல்யம் திருமண சேவை**

உள்நாட்டில் படித்த மணமகள்களுக்கு வெளிநாட்டு மணமகன்களும். 1987 வெளிநாட்டு மணமகனுக்கு மணமகள். 1980 மணமகனுக்கு மணமகள் தேவை. கல்வி எதிர்பார்ப்பு இல்லை.

thirumaangalyam.com
077 120 4651, 021 728 4433

**Pharmacist தேவை**

யாழ் மாவட்டத்தில் இயங்கிவரும் பிரபல மருந்தகம் ஒன்றிற்கு Pharmacist தேவை.

077 245 4224

**Canada Work Visa 2022 & 2023**

1. Business management 2. Hospitality 3. Visual Arts 4. Medical & Health Care
- Other categories
Baker, Plumber, Cook, Hairstylist, Electrician, Welder, Painter, Tile setter and etc...
- Minimum Qualifications - A/L No need IELTS

Visa Consultant :
134 Adiyapatham Road, Thirunelvely, Jaffna T.P 0770385584
Email Id: naltcjaffna@gmail.com

# சமூகப்பாதுகாப்புக்கு முன்னுரிமையளியுங்கள்
## ஹர்ஷ டி சில்வா கோரிக்கை

நாட்டில் அனைத்து அத்தியாவசியமற்ற செயற்றிட்டங்களும் நிறுத்தப்பட்டு, அதற்கென செலவிடப்படும் நிதியை, சமூகப் பாதுகாப்புக்காகப் பயன்டுத்தவேண்டும்என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நீங்கள் எங்கு வேலை செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. வறுமையில் இருந்து விடுபடாமல் வாழமுடியுமா? என்பதுதான் முக்கியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-இ)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 69 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- ✓ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✓ நன்னீரூற்று
- ✓ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- ✓ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம் கைதடி சந்தி 500 M தூரம்
- ✓ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ 1 பரப்பின் விலை 4 லட்சம்
- ✓ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை

தொடர்பு: 077 6234 204
077 2880 152
076 4365 814

(CS 1036) 1-6

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு

- ❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்ட் வோட்)
- ❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- ❖ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ❖ வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389, 077 241 7589

**அகவை 60 வாழ்த்துக்கள்**




திரு. சங்கரப்பிள்ளை தயானந்தன்

நற்குருவாக
நல்ல நண்பனாக
நம் குடும்பத்தில் ஒருவராக
நமக்கு நல்வழிகாட்டிய
நம் மதிப்புக் குரிய ஆசானே!

என்றும் நலமுடன் வாழ வாழ்த்தும்

திரு.திருமதி ச.லோகநாதன் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.